கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

29-9-1974

50 காசு



அம்மா குடுமா ஓவோமால்ட் பெரிசா பலமா வளர்வேனே!



அதிக புரதம், மால்ட், கோகோ,
பால் கலந்தது ஒவோமால்ட்.
100 சதம் மொரமொரப்பான
கிரான்யூலர். தசை, எலும்பு
வளர்ச்சிக்கு ஏற்றது ஒவோமால்ட்.
நோயாளிகளுக்குத் தெம்பூட்டும்.
களைப்பை அகற்றிவிடும் ஒவோமால்ட்
டாக்டர்கள் சிபாரிசு செய்வது.
எல்லா வயதினருக்கும் ஏற்றது.
உங்கள் குழந்தைகள் வெறும் பாலை
மட்டும் சுவைத்து பருகுவதில்லை.
பாலில் ஒவோமால்ட் கலந்து
கொடுங்கள். ஒவோமால்ட் ஒரு புது
சுவையைத் தருகிறது. அது பாலை
மேலும் சத்துள்ளதாக்குகிறது.
இப்போது உங்கள் குழந்தை மிகுந்த
ஆசையுடன் பாலை அருந்தும்
ஏனெனில் ஆரோக்கியத்திற்கும்,
சுவைக்கும் உகந்த் ஒவோமால்ட்
கலந்த பால் அது!

வியாபார விபரங்களுக்கு:
ஃபுட்ஸ், ஃபேட்ஸ் & ஃபெர்டிலைசர்ஸ்
லிமிடெட்.
சென்னை-600001

FFF-9R

ஓவோமால்ட்

முழுமையான சக்தி



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 13

செப்டம்பர் 29, 1974

ஆனந்த், புரட்டாசி, 13

■

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:

கோகுலம்

கச்சிப் பூங்கா, சென்னை-600031




அட்டையில்:

லிங்கத்துக்கு நாகப்பாம்பு
பூஜை செய்யுது!
தங்கையதைப் பாத்துமிக
நேர்த்தி என்கிறான்!

வண்ணப்படம்:

நடராஜலிங்கம்



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

எல்லாக் காரியங்களையும் இடர் நீக்கி முடித்துத் தருகின்ற எம்பெருமான் விநாயகர். காரியம் முடியப் புத்தி வேண்டும். புத்தியிருந்தால் காரியம் சித்தியாகும். இந்த இரு சக்திகளும் பிரமதேவரிடம் தோன்றிப் பெண் குழந்தைகளாக வளர்ந்திருந்தார்கள். இந்தச் சித்தி புத்தி என்ற பெண்களை விநாயகர் மணந்து கொண்டருளினர்.

மரீசி முனிவர் தம் தந்தையாகிய பிரமதேவரிடம் விநாயகருடைய முழுமுதல் தன்மையைக் கேட்டறிந்தார். விநாயகரை நோக்கி இருபத்தோர் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். விநாயகர் அவருக்குக் காட்சி அளித்தார். மரீசி முனிவர் தணியாத அன்புடன் விநாயகருடைய மலர்ப் பதங்களில் விழுந்து பல முறை பணிந்தார்.

''அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று விநாயகர் கேட்டார்.

மரீசி முனிவர்: ''தேவாதி தேவா! எனக்கு அரசியல் செல்வத்தைத் தர வேண்டும்; எல்லோரும் என் ஆணை வழி ஒழுக வேண்டும். எப்போதும் எந்த இடத்தும் எனக்கு எந்த வகையான இடையூறுகளும் எய்தாதிருக்க வேண்டும். குற்றமற்ற புதல்வர்கள் பலர் பிறக்க வேண்டும். உம்மைத் தவிர வேறு தெய்வத்தை நான் போற்றாதிருக்க வேண்டும். உமது சக்தியே எனக்கு மகளாக வேண்டும். அம்மகளைத் தேவரீர் திருமணம் செய்து கொண்டு திருவருள் புரியவேண்டும்'' என்று வரம் கேட்டார்.

ஐந்து கரத்தண்ணல் அவர் கேட்ட வரங்களை வழங்கி யருளினர்.

பிறகு மரீசி தேவவல்லி என்ற பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். ஆயிரம் சற்புத்திரர்கள் பிறந்தார்கள். புதல்வியரும் பிறந்தார்கள். ஒரு நாள் யமுனை ஆற்றில் ஒரு தாமரை மலரில் சக்தி ஒரு குழந்தையாக வீற்றிருந்தாள். அப்பெண் குழந்தையை மரீசி முனிவர் எடுத்து ''வல்லபை'' என்று பேர் சூட்டி வளர்த்தார். வல்லபை விநாயகரை நோக்கித் தவம் செய்தாள். விநாயகர் ஓர் அந்தணராகச் சென்று வல்லபையிடம் சொற்போரிட்டார். பிறகு தமது காட்சியைத் தந்தார். மரீசி முனிவர் மகள் திருமணத்தை உறுதி செய்து மூவருக்கும் தேவருக்கும் திருமண ஓலை அனுப்பினர். விநாயகப் பெருமான் அங்கு எழுந்தருளினர். பார்வதியம்மை மகனுக்குத் திருமணக் கோலஞ் செய்தார். வல்லபைக்கும் விநாயகருக்கும் திருமணம் நிகழ்ந்தது. நாரதாதி முனிவர்கள் பாடினார்கள். அரம்பையர்கள் ஆடினார்கள். கற்பகமும் காமதேனுவும் விருந்து செய்தன. எல்லோரும் மணமக்களை வணங்கி அவர்களின் ஆசியைப் பெற்றார்கள்.

அங்கே வந்திருந்த திருமாலும் திருமகளும் தங்கள் புதல்வியர்களாகிய மோதை, பிரமோதை, சுமதை, சுந்தரி, மனோரமை, மங்கலை, தேகினி, காந்தை, சாருகாசை, சுமந்திமை, நந்தினி, காமதை என்ற பன்னிருவரை விநாயகருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். எல்லோரும் விநாயகருடைய திருவருளைப் பெற்றார்கள். விநாயகர் தமது மணித்தீபம் என்ற உலகை அடைந்தார்.

— சுபம் —





பேய் மண்டபம்

ஜே.வி.நாதன்

மனம் 'திக் திக்' கென்று அடித்துக் கொள்ள, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அந்தப் பயங்கர இருளில்—ஒற்றையடிப் பாதையில் நடந்தான் மோகன். இரு பக்கமும் முட்புதர்கள்; நீண்டு உயர்ந்து காற்றில் தலைவிரித்தாடும் மரங்கள்! தூரத்தில் ஏதோ நெருப்பு எரிவது தெரிந்தது. கொள்ளி வாய்ப் பிசாசா? மோகனின் இதயம் ஒரு கணம் நின்று இயங்கியது. ''சே, சுடுகாட்டில் ஏதோ பிணம் எரியும் நெருப்பு அல்லவா அது?''

அந்த ஜ்வாலையில் மோகன் தேடி வந்த மண்டபம் மங்கலாய்க் காட்சி அளித்தது. குப்பென்று வியர்வை. ஆம் அதுதான் பேய் மண்டபம்!

மோகன் பேய் மண்டபத்தை மெல்ல நெருங்கிய வேளையில் எங்கிருந்தோ ஒரு நரி ஊளையிடும் சப்தம் கேட்டது. இரத்தம் உறைந்து விடுவது போன்ற அச்சப்தத்தைக் கேட்டதும், திரும்பிக்கூடப் பாராமல் கண்ணை இறுக மூடிக் கொண்டு விழுந்தடித்து ஓடிவிடலாமா என்று மோகன் ஒரு கணம் எண்ணி விட்டான். ஆனால் வந்த காரியத்தை முடிக்காமல் போனால் ''துணிச்சல் காரர்கள் சங்க'' மெம்பர்களான அம்பி, சீராளன், குண்டுப்பயல், அசட்டு ராமு எல்லோரும் கேலி செய்து கைகொட்டிச் சிரிப்பார்களே!

கையில் சுத்தியலும், காலண்டரும் பாரமாய்க் கனத்தன. தைரியத்துடன் அடியெடுத்து வைத்தவன், திகைத்துப் போய் நின்றான்.

''ஐயோ! அது என்ன? வெண்மையாகக் காற்றில் பறப்பதைப் போல ஓர் உருவம் பேய் மண்டபத்திலிருந்து வருகிறதே, நிச்சயம் அது அங்கு வசிக்கும் பிசாசுகளில் ஒன்றுதான்!''—நடுங்கியது மோகனின் உடல். பேய் விரைவாக அவனை நோக்கி வந்தது.

நீங்கள் ''து. கா. ச.'' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? புவனகிரி உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கும் சுட்டிப் பயல் மோகனும், அவனது நண்பர்களும் சேர்ந்து ஏற்படுத்தியதுதான் து. கா. ச. அதாவது: 'துணிச்சல் காரர்கள் சங்கம்!' துணிச்சலே அவர்கள் லட்சியம். ஓய்வு நேரத்தில் பலருக்கு உதவுவதும், சேவை செய்வதுமே அவர்கள் சங்க நோக்கம். ''அப்படி இந்தப் பொடியன்கள் என்ன பிரமாத சேவை செய்துவிடுவார்கள்'' என்கிறீர்களா? கடைவரை நடக்க முடியாத கோடி வீட்டுத் தாத்தாவுக்குப் பொடி வாங்கி வந்து தருவதும்கூட ஒரு சேவைதானே!

மொட்டைத் தலை அம்பிதான் ஐடியா கூறினான். ''து. கா. ச''வுக்கு ஒரு தலைவர் மிகவும் அவசியம் என்று. தலைவனாக யாரை நியமிப்பது என்று குழப்பம் ஏற்பட்டது. துணிச்சல்காரர்களின் தலைவன் துணிவு அதிகம் பெற்றிருக்க வேண்டுமே! ஒல்லிப் பிச்சான் — சீராளனின் காரணப் பெயர்—ஒரு குண்டு வீசினான். ''டேய்! சுடுகாடு கிட்டே பாழடைஞ்ச மண்டபம் ஒண்ணு இருக்கே தெரியுமா?''

''ஐயையோ, பேய் மண்டபத்தையா சொல்றே? அங்கே கொள்ளிவாய்ப் பிசாசு, பயங்கரமான பேய்கள் எல்லாம் குடியிருக்குதுன்னு கதை கதையாகச் சொல்லுவார்களே!'' என்று நடுக்கத்தோடு சொன்னான் குண்டுப் பயல்.

''ஆமாம், துணிச்சல்காரர்கள் சங்கம்னு பேர் வைச்சுக்கிட்டு பயந்தால் முடியுமா? ராத்திரி பத்து மணிக்குத் தனியாய்ப் போய் அந்த மண்டபத்



து சுவரிலே காலண்டரை ஆணியடித்து மாட்டிட்டு வரணும். அவ்வளவு வீரம் இருக்கிறவன்தான் நம்ம சங்கத்துக்கு தலைவனுகத் தகுதி உள்ளவன்!''

''ஐயையோ, நம்மால் முடியா தப்பா! கேக்கறபோதே குலை நடுங்குது!'' என்று ஒவ்வொருவராக ஒதுங்கியபோது மோகன் துணிச்சலுடன் முன்வந்தான். அன்றிரவே, திண்ணையில் படுத்திருப்பது போல் போக்குக் காட்டி வீட்டை ஏமாற்றிவிட்டு எல்லோரும் ஒன்று கூடினர்கள். கையில் காலண்டர், சுத்தியல், ஆணி சகிதம் மோகனை வழியனுப்பியபோது, ''மோகன்! பேயைக் கண்டால் பயப்படாதே! சும்மா சுட்டுத் தள்ளு!'' என்று கேப் துப்பாக்கி ஒன்றை அவனிடம் தந்தான் குண்டுப் பயல். ''பயப்படாதேடா'' என்று சொல்கிறபோதே வார்த்தைகள் குழறின குண்டுப் பயலுக்கு — அத்தனை பயம்!

புதரில் நன்ருக ஒளிந்து கொண்டான் மோகன். பேய் அவன் மறைந்திருந்த புதருக்கு வெகு சமீபத்தில் நடந்து மண்டபத்தினருகில் சென்றது. அச்சமயம் இன்னெரு பேயும் தோன்றி அதனுடன் சேர்ந்து கொண்டது.


மோகன் புதரை விலக்கி எட்டிப் பார்த்தான்.

ஒரு பேய் தரையில் குனிந்து நீட்டிக் கொண்டிருந்த கம்பி ஒன்றைப் பிடித்து இழுக்கவும் ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. ''கடகட''வென்ற இரைச்சலோடு சுவர் இரண்டாகப் பிளந்தது. அதனுள் இரண்டு பேய்களும் நுழைந்தன. நடப்பது நடக்கட்டும் என்று மோகனும் பேய்களைப் பின்தொடர்ந்து உள்ளே சென்ருன். வெகு நேரம் தடுமாறி நடந்த பின் அங்கே பல பெட்டிகள், ஏதேதோ இயந்திரங்கள் காணப்பட்டன. அப்போது மோகனின் கால்கள் எதிலோ இடறிப் பெருத்த சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய பேய்களின் கண்களில் அவன் பட்டு விட்டான்.

உச்சி முதல் உள்ளங்கால் வரை நடுக்கம் எடுத்தது மோகனுக்கு. பேய்கள் அவனை நெருங்கி வந்தன.

சட்டென்று ஒரு யோசனை. பாக்கெட்டில் கையை விட்டு 'கேப்' துப்பாக்கியை எடுத்து,''அப்படியே நில்லுங்கள், ஒரு அடி எடுத்து வைத்தாலும் சுட்டுவிடுவேன்!'' என்று கர்ஜித்தான் மோகன். பேய்கள் மேலே கையை உயர்த்தி அப்படியே நின்றன. மோகனுக்கு ஒரே வியப்பு! அட, நம் குருட்டு யோசனை கூடப் பலித்து விட்டதே! பேய்கள் துப்பாக்கியைக் கண்டு பயப்படுகின்றனவே! என்று வியந்து யோசனை செய்தபடி உற்றுப் பார்த்தபோதுதான் அவனுக்கு விஷயம் புரிந்தது. எதிரே நின்றது பேயல்ல; மனிதர்கள்!

''உம், நடவுங்கள்!''—கம்பீரமாகத் துப்பாக்கியைக் காட்டி அவர்களை





வயதான பிறகும் சிறந்த குணத்தையும் சுபாவத்தையும் பெறுதவர்கள் மனிதராகமாட்டார்கள். மனிதனுக்கு உருவம் மாத்திரம் இருந்தால் போதாது. பரோபகார சிந்தையும் வேண்டும். இல்லையேல் சித்திரத்துக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் ஏது? — ஸா அதி

நீ பேசப் போகும் எல்லாவற்றையும் நன்றாக யோசி. ஆனால் யோசிப்பதை எல்லாம் பேசி விடாதே. — டெலார்மீ

முன்னால் நடக்கச் சொன்னான் மோகன். மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொஞ்ச தூரம் சென்ற பிறகு அவர்களுக்கு ஏதோ சந்தேகம் வந்தது. சட்டென்று ஒருவன் பாய்ந்து மோகன் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தான். மோகன் செய்வதறியாமல் திகைத்தான். ''அட, சே! தீபாவளித் துப்பாக்கி. பொடிப் பயல் ஏமாத்திப் புட்டானே! உம்...உம்... பையன் மண்டையிலே ரெண்டு போட்டு நம்ம மண்டபத்துக்குக் கொண்டு போ!'' என்று சீறினான் அவன். அச்சமயம் —

''அசைந்தால் தொலைந்தீர்கள்!'' என்ற கர்ஜனை கேட்டது. ஒரு கையில் டார்ச் லைட்டும், மறு கையில் ரிவால்வருடனும் கம்பீரமாக வந்தது இன்ஸ்பெக்டர் மாமாவேதான். ''அரெஸ்ட் தெம்!'' என்று அவர் கத்தியதும் கான்ஸ்டபிள்கள் அந்த இரு பேர்வழிகளின் கைகளிலும் விலங்கு பூட்டினார்கள். இன்ஸ்பெக்டர் மாமாவின் பின்னால் அம்பி, குண்டுப் பயல், சீராளன் தலை தெரிந்தது. நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான் மோகன்.

பேய் மண்டபத்துக்கு எல்லோரும் நடந்தார்கள். சுரங்க வழியை மோகன் திறந்தான். உள்ளே சென்றனர். அங்கே ஓர் இடத்தில் பத்துப் பன்னிரண்டு பேர் குடித்துக் கொண்டும், கொம்மாளம் போட்டுக் கொண்டும் இருந்தனர். அனைவரும் கைதாயினர். பெட்டிகளை உடைத்துப் பார்த்ததில் அவ்வளவும் கடத்தல் சரக்குகள்—தங்கப் பாளங்கள், சில பெட்டிகளில் கள்ள நோட்டுகள்! நோட்டு அச்சிடும் இயந்திரங்களும் ஒரு மூலையில் காணப்பட்டன.

மறுநாள் புவனகிரி நகர் அமர்க்களப் பட்டது. 'துணிச்சல் காரர்கள் சங்க' மெம்பர்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடந்தனர். பேய் நடமாட்டம் இருப்பதாக மக்களைப் பயமுறுத்தி சட்ட விரோதமான காரியங்களைச் செய்து கொண்டிருந்த சதிக் கும்பலைப் பிடிக்கக் காரணமான சிறுவர்களைப் பாராட்டினார் இன்ஸ்பெக்டர். மோகனின் துணிச்சலைப் புகழ்ந்து தட்டிக் கொடுத்ததோடு விரைவில் அவனுக்கு அரசாங்கப் பரிசு ஒன்றும் காத்திருக்கிறது என்பதையும் அறிவித்தார்.

''வாழ்க! வாழ்க!'' என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது. பெண் பிள்ளை போல வெட்கப்பட்ட மோகன் ''டேய், அதெல்லாம் இருக்கட்டுமடா, அம்பி! அதெப்படி கரெக்டா அந்தச் சமயத்திலே இன்ஸ்பெக்டர் மாமாவை அழைச்சுக்கிட்டு வந்தீங்க?'' என்று கேட்டான்.

''மோகன்! நீ போனதுக்கப்புறம் எங்களுக்கெல்லாம் ஒரே நடுக்கமாய்ப் போயிடுச்சுடா. உனக்கு ஏதாவது ஆபத்து வந்துட்டா என்ன பண்ணுவது என்று யோசிச்சோம். அந்த வேளையில் இன்ஸ்பெக்டர் மாமா காற்று வாங்க இப்படி நடந்து வந்தார். ஓடிப் போய் விஷயத்தைச் சொன்னோம். ''பேய் மண்டபத்துக்கா போனான்? அந்தப் பக்கத்தில் ஒரு சதிக் கூட்டம் உலவுவதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. சரி, வாருங்கள் போய்ப் பார்ப்போம்!'' என்று கூறிவிட்டு நான்கைந்து கான்ஸ்டபிள்களுடன் எங்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். உன்னைப் பார்க்கிறவரை எங்களுக்கெல்லாம் உயிரே இல்லையடா மோகன்!'' என்றான் அம்பி.

''நீங்க மட்டும் இன்ஸ்பெக்டர் மாமாவைச் சரியான சமயத்தில் அழைத்து வந்திருக்கா விட்டால் இந்நேரம் நான் எமலோகத்தில்தான் இருப்பேன்'' என்று சிலிர்ப்புடன் கூறினான் மோகன்.



கண்ணன் தூங்குகிறான்

"சக்திக்கனல்"

காற்றே காற்றே மெதுவாய் வா
 கண்ணன் இப்போ தூங்கு கிறான்.
விட்டுக் குருவி கத்தாதே !
 வெள்ளைக் கோழி கூவாதே !

குட்டி நாயே குரைக்கா தே !
 குமரன் அயர்ந்து தூங்கு கிறான்
விட்டில் பூனை 'மியாவ்' வேண்டாம்
 மன்னன் தூக்கம் கெட்டுவிடும்.

குயிலே பாட்டு வேண்டாம்மா !
 குழந்தை தூங்கும் நேரமம்மா !
மயிலே நடனம் போதுமடி !
 மழலைச் செல்வன் தூங்குகிறான் !

காக்கா காக்கா கத்தாதே !
 கன்றே ''அம்மா' என்னாதே
பூக்கும் மலரில் வண்டேகேள் !
 புன்னகை மைந்தன் தூங்குகிறான் !

அப்பன் தூங்கி விழித்ததுமே
 அழைப்பேன் உங்களை விளையாட
இப்போ சமர்த்தாய் இருந்திடுவீர்
 என்கண் மணிகண் மலரும்வரை !

வள்ளுவனும் குறளும்

சாரதிதாசன்

அமுத மான தமிழிலே
 அருமை யான குறளினை
நமக்க ளித்தான் வாய்மையார்
 ஞான மிக்க வள்ளுவன்.

ஒன்றே முக்கால் அடியிலே
 உலகம் வாழும் முறையினை
நன்றே வகுத்துக் காட்டினன்
 நமது முன்னோன் வள்ளுவன்.

அகரம் முதலே தமிழெனை
 அஞ்சி டாது சொன்னவன்
பகவன் முதலே உலகெனப்
 பாடி வைத்த வள்ளுவன்.

ஈடி லாத அறம்பொருள்
 இன்பம் என்ற மூன்றையும்
வாடி டாத கவிதையாய்
 வரைந்து வைத்தோன் வள்ளுவன்.

பிள்ளை மொழியைப் போற்றினன்
 பெண்டிர் கற்பை ஏற்றினன்
கள்ளை இழியத் தூற்றினன்
 கனியமுதக் குறளினால்.

சங்கப் புலவர் அனைவரும்
 தமிழர் வேதம் என்னவே
துங்கத் தமிழில் பாடினன்
 தூய புகழைச் சூடினன்.

வைய கத்தில் உள்ளவர்
 வாழ்க்கை செம்மை யாகவே
ஐய மின்றிக் குறளினை
 ஆழ்ந்து கற்று வாழ்கவே.





ஐன்ஸ்டீன்

அணுசக்தியின் அளப்பறிய பயன்களை உலகுக்கு உணர்த்திய ஒப்பற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன். அவரைப் பற்றிய சில ரசமான வாழ்க்கை நிகழ்ச்சிகள் இவை.

குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை ஐன்ஸ்டீனுக்கு. இவர் இல்லத்துக்கு அருகே வசித்து வந்தாள் ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி. தினமும் பள்ளியிலிருந்து திரும்பும் போது இவர் வீட்டுக்குச் சென்று சிறிது நேரம் தங்கிவிட்டுத்தான் அவள் வீடு திரும்புவாள். பன்னிரண்டு வயதுப் பெண்ணுக்கும், விஞ்ஞான உலகின் மகா மேதாவியான இவருக்கும் தினமும் அளவளாவ அப்படி என்ன விஷயம் இருக்கும் என்பது பலருக்கும் புரியாத புதிராக இருந்தது. ஒரு நாள் அந்தப் பெண்ணின் தாயாரே இதை ஐன்ஸ்டீனிடம் கேட்டுவிட்டாள். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, ''வேறொன்றுமில்லை. உங்கள் மகள் எனக்குத் தினமும் தின்பண்டங்கள் கொண்டு வந்து தருகிறாள். அதற்கு ஈடாக நான் தினமும் அவளுடைய பள்ளிக்கூடத்தில் தரும் வீட்டுக் கணக்குகளைப் போட்டுத் தருகிறேன். அவ்வளவுதான்!'' என்றாரே பார்க்கலாம். குழந்தைகளுக்கு அவ்வளவுக்கு எளிமையானவர் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் என்ன வேண்டும்?

ஒரு சமயம் இவருடைய பிறந்த நாளின் போது பத்திரிகை நிருபர் அது பற்றிக் கேட்டபோது. ''பிறந்த நாளாவது மண்ணாங்கட்டியாவது! குழந்தைகளுக்குத்தான் பிறந்தநாள் கொண்டாடுவார்கள் எனக்கு எதற்கு?'' என்றார்.

ஆடம்பரத்தை விரும்பாதவர் ஐன்ஸ்டீன். ரயிலில் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வார். அணியும் உடைகளில் பகட்டை விரும்பாதவர். அதில் அக்கறையும் காட்டமாட்டார். ஐன்ஸ்டீனிடம் மூன்று ஜதை மூக்குக் கண்ணாடிகள் இருந்ததைக் கண்ட ஒருவர் இத்தனை எதற்கு என்று கேட்டபோது இவர் சொன்னார். ''படிப்பதற்கு ஒன்று, தூரப் பார்வைக்கு மற்றொன்று. இந்த இரண்டும் அடிக்கடி காணாமல் போய் விடுகின்றன. ஆகவே அவைகளைத் தேடியெடுக்க இந்த மூன்றாவது கண்ணாடி!''

ஒரு தடவை ''வாழ்க்கையின் வெற்றிக்கான சூத்திரம் என்ன, சொல்லுங்கள்!'' என்றார் ஒருவர்.

ஐன்ஸ்டீன் கூறினார், '' 'ஏ' என்பது வாழ்க்கையில் வெற்றியைக் குறிக்கிறது. எக்ஸ், ஒய், இஸெட் இவை மூன்றும் சேரும் போது 'ஏ! உண்டாகிறது. 'எக்ஸ்' என்பது உழைப்பு, 'ஒய்' என்பது விளையாட்டு'' என்று கூறி நிறுத்தினார். 'இஸெட்' எதைக் குறிக்கிறது?'' என்று கேட்டார் நண்பர்.

''பேசாமல் உமது வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது '' என்றார் ஐன்ஸ்டீன் சட்டென்று.

ஒரு சமயம் ஒரு பத்திரிகை நிருபர் இவருடைய உறவு நிலைத் தத்துவம் பற்றி விளக்கும்படி வேண்டினார். ஐன்ஸ்டீன் கூறினார். ''நீ ஓர் அழகான மங்கையோடு இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று வைத்துக் கொள். அப்போது உனக்கு அத்தனை நேரம் போனதே தெரிந்திருக்காது. ஏதோ சில நிமிடங்களே ஆனது போலத்தான் தோன்றும். ஆனால் கொழுந்துவிட்டெரியும் அடுப்பின் மீது ஒரு நிமிஷம் உட்கார்ந்திருந்தாலும் பல மணி நேரம் அதன் மீதிருந்து தவித்ததைப் போலத் துடிப்பாய். இதுதான் உறவு நிலைத் தத்துவம். இதை நீ சோதனை செய்து பார்க்க விரும்பினால் நான் விளக்கத் தயாராக இருக்கிறேன். அழகியோடு நான் பேசுகிறேன். அடுப்பின் மீது நீ அமர்ந்து கொள்'' என்றார்.

குழந்தைகளோடு குழந்தையாக விளையாடி மகிழ்வதில் விருப்பம் கொண்டவர் இந்த மேதை. நம் ஊர்களில் கிருஷ்ணன் பிறப்புக்குக் குழந்தைகள் எண்ணெய், காசு கேட்டு


வீடு வீடாகப் படி ஏறிப் போவார்கள் இல்லையா? அப்படி மேல் நாட்டில் சிறுவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது வீடு வீடாகப் போய்ப் பாடிக் காசு தண்டுவார்கள். அப்படி ஒரு சமயம் ஈன்ஸ்டீனின் வீட்டு முன்னால் வந்து நின்று பாடினார்கள். இவர் வெளியே வந்தபோது, ''கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட எங்களுக்குக் காசு போடுங்கள்'' என்றனர்.

ஈன்ஸ்டீன் என்ன செய்தார் தெரியுமா? மௌனமாக உள்ளே போனார். கோட்டை மாட்டிக் கொண்டார். தொள தொள என்று ஒரு குல்லாயை எடுத்து மாட்டிக் கொண்டார். தம்முடைய பிடிலுடன் தெருவில் இறங்கியவர் சிறுவர்களிடம், ''வாருங்கள், போகலாம். என்னையும் உங்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளுங்கள். கிடைப்பதில் எனக்கும் கொஞ்சம் பங்கு கொடுங்கள், போதும்'' என்று வயலினை மீட்டியபடி அந்தக் குழந்தைகள் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிக் கிளம்பிவிட்டார்.

கணித இயலிலும் பௌதிக இயலிலும் மகா மேதையாக விளங்கிய ஈன்ஸ்டீன் சாதாரண லௌகிகக் கணக்கு வழக்குகளில் எத்தனை மோசமானவராக இருந்தார் என்பதற்கு இதோ ஒரு சம்பவம். ஜெர்மனியிலிருந்த போது ஒரு சமயம் டிராம் வண்டியில் பிரயாணம் செய்தார். ஒரு ரூபாய் பெறுமானம் உள்ள நோட்டைக் கொடுத்து டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டார். கண்டக்டர் மீதிச் சில்லறையைச் சரியாகக் கொடுத்திருந்தார். ஆனால் ஈன்ஸ்டீன் அதைப் பலமுறை எண்ணிப் பார்த்துச் சில்லறை சரியாகத் தரவில்லை என்றார். அவன் அதை அவரிடமிருந்து வாங்கி எண்ணிய போது சரியாகவே இருந்தது. ''ஒரு ரூபாய் சில்லறையைச் சரியாக எண்ணத் தெரியாத நீங்களெல்லாம் வண்டியில் ஏறி ஏன் தொல்லை தருகிறீர்கள்?'' என்று அலட்சியமாக அவர் கையில் சில்லறைகளைத் திணித்து விட்டுப் போனான். ஈன்ஸ்டீனுக்குக் கணக்குத் தெரியவில்லை என்றால் நம்ப முடியுமா?

விஞ்ஞான விஷயம் பற்றிப் பேசும் போதோ அதில் ஈடுபடும் போதோ ஈன்ஸ்டீன் தம்மையும் சுற்றுச் சூழலையும் அறவே மறந்து விடுவார். ஒரு சமயம் கலிபோர்னியாவில் உள்ள தொழில் நுட்பக் கல்விச் சாலையைக் காணப் போனார். அங்கு பூகம்ப ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் இருந்தார். அவருடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. ஒரு வழியாகப் பேச்சு முடிந்து தாம் தங்கியுள்ள ஹோட்டலுக்கு வந்த போது அங்கு ஒரே களேபரமாக இருந்தது. ஈன்ஸ்டீனுக்கு ஏதுமே புரியவில்லை. 'ஏன் இவ்வளவு கூட்டம், ரகளை?' என்று எண்ணியபடியே தம் அறைக்குப் போனார். அங்கு அவர் மனைவி மயங்கிக் கிடந்தாள். திடுக்கிட்டுப் போன ஈன்ஸ்டீன் அவளுக்கு நினைவு திரும்பியதும், 'என்ன, ஏன் இப்படி?' என்று கேட்டபோது அவளுக்கு வியப்பான வியப்பு. ''உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? சற்று முன் நில அதிர்ச்சி ஏற்பட்டதே? இதுகூடவா உங்களைப் பாதிக்கவில்லை?'' என்று கேட்டாள்.

உரையாடலில் லயித்துப் போயிருந்த இவருக்கும் இவரது



நண்பருக்கும் பூகம்பம் ஏற்பட்டதுகூடத் தெரியவில்லை!

நாடக அரங்கம். நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஐன்ஸ்டீனும் இன்னொரு பிரபல விஞ்ஞானியும் அருகருகே அமர்ந்து நாடகம் பார்த்துக்கொண்டிருப்பதை அவர்களுக்குப் பின்னால் இருந்த ஒருவர் பார்த்தார். இரண்டு பெரிய விஞ்ஞானிகளை ஒருசேரப் பார்த்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அவருக்கு. இடைவேளையின்போது எல்லாரும் வெளியே எழுந்து போனார்கள். விஞ்ஞானிகள் வெளியே போகவில்லை. பின்னாலிருந்தவரும் அவர்களையே பூரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். ஐன்ஸ்டீன் தம் சட்டைப் பையிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து அதில் ஏதோ எழுதி மற்றவரிடம் காட்டினார். அவரும் அதைப் பார்த்துவிட்டுத் தாமும் ஏதோ எழுதி அதை ஐன்ஸ்டீனிடம் கொடுத்தார். பின்னாலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்தவருக்குத் தாங்கமுடியாத தவிப்பு. இவர்கள் ஏதோ புதிய விஞ்ஞான விந்தையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைத்தான் ஒருவருக்கொருவர் இப்படிப் பரிமாறிப் பார்த்துக் கொள்கிறார்கள் போலும். இதை முதன் முதலில் காணும் பாக்கியம் நமக்குக் கிடைத்ததே என்று மகிழ்ந்துபோய் அருகில் சென்று காணலாம் என்று போனார். அவர்கள் பரிமாறிக் கொண்ட காகிதத்தை உற்றுக் கவனித்தபோது அவருக்கு வந்த சிரிப்பை அடக்கமாட்டாமல் தவித்துப் போய் விட்டார்.

ஐன்ஸ்டீனும் அந்த விஞ்ஞானியும் காகிதத்தில் என்ன எழுதி இருந்தார்கள் தெரியுமா? புள்ளி வைத்துக் கோடுகளால் ஒன்று சேர்க்கும் 'டிக் டாக் டோ' என்ற விளையாட்டைத்தான் அவ்விரு மேதைகளும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்! அவர்களும் மனிதர்கள்தானே! விளையாட வேண்டும் என்ற ஆசை இருக்காதா பின்னே?

இப்படி உலகை அணு யுகத்துக்கு உந்தித் தள்ளிய இந்த மேதையின் வாழ்க்கையில் எத்தனையோ ரசமான சம்பவங்கள். தாம் கண்டுபிடித்த அணு சக்தியை உலக அழிவுக்குப் பயன்படுத்துவதை மனமார வெறுத்தவர் இந்த விஞ்ஞானி.

□ □ □ □ ஓ, அப்படியா? □ □ □ □

பட்டு: மண் புழுவாரே, சௌக்கியமா? அது சரி, நான் அருகே வந்ததுமே உடம்பைச் சுருக்கிக்கொண்டு பின்வாங்குகிறீரே, நான் ஓசைப்படாமல், மெதுவாகத்தானே உம்மிடம் வந்தேன். உமக்கு எப்படி என் வரவு தெரிந்தது?

மண்புழு: எதையும் பார்க்கவோ கேட்கவோ எங்களுக்குக் கண்ணும் காதும் கிடையாது. ஆனால் எங்கள் உடலின் தோல் இருக்கிறதே அது மிக மிக உணர்ச்சியுடையது. பகலெல்லாம் நாங்கள் பூமிக்குள் இருப்போம். இரவில் தான் இரைதேட வெளியே வருவோம். பூமியின் மேலே மிக நுண்ணிய ஒலி அதிர்வு ஏற்பட்டாலும் அதை உடனே எங்கள் உடல் உணர்ந்துவிடும். கண்ணும் காதுமாக விளங்குகிறது, எங்கள் தோல். ஆனால் இதனால் நாங்கள் எங்கள் எல்லா விரோதிகளையும் வெற்றி கொண்டு விடுவதாகச் சொல்ல முடியாது. பூமியைத் தொடாமலே ஆகாயத்தில் பறந்து வந்து தாக்கும் பறவைகளிடம் எங்கள் பாச்சா பலிக்காது. சில பறவைகள் எங்களை முழுவதுமாகப் பூமியிலிருந்து வெளியே இழுத்து உணவாகக் கொள்ளும் வல்லமை பெற்றவை. சில பறவைகளுக்கு அந்தத் திறமை கிடையாது. பற்றி இழுக்கும்போது எங்கள் உடல் பாதியாக அறுந்துவிடும். ஆனாலுமென்ன? மறுபாதி உடலில் நாங்கள் மறுபடி பூரணமாக வளர்ந்து விடுவோம்.

பட்டு: கண்ணில்லை காதில்லை. வெட்டப்பட்டாலும் வளர்ந்து விடுவீர்கள். அடேயப்பா! புழுவானாலும் உங்கள் புகழ் பிரமாதம்தான்!



கர்வம் அழிந்தது

கேணிகன்



முன்னொரு காலத்தில் மிக மிக அழகான ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் அந்தத் தேசத்து ராஜாவுக்கு ஒரே மகள். அவளை மணக்க ஏராளமான அரச குமாரர்கள் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். அவள் அழகி மட்டுமல்ல; ரொம்பவும் அகம்பாவமுடையவள். தன்னை மணக்க வந்தவர்களையெல்லாம் ஏதாவது குறை சொல்லி நிராகரித்து வந்தாள். இதனால் அவளுக்குத் திருமணமாகாமலே இருந்தது.

ஒரு ராஜகுமாரன் இவளைப் பற்றிக் கேள்விப்பட்டான். உண்மையிலேயே ரொம்ப அழகன் அவன். ஆண்மைமிக்கவன். அவனிடம் உள்ள ஒரே குறை அவனுடைய தாடையில் கறுப்பான ஒரு மச்சம் இருந்ததுதான்.


அவனைக் கண்டதும் வழக்கப்படி ராஜகுமாரி வெள்ளிச் சலங்கை குலுங்குவது போல் கலகலவென்று சிரித்தாள். ''வண்டு குடைந்த மாம்பழத்தை யாராவது விரும்புவார்களா?'' என்றாள் அந்த இளவரசனின் மச்சத்தை மனத்தில் கொண்டு. ராஜகுமாரன் மௌனமாக வெளியேறினான். ஆனால் அப்போதே தீர்மானித்துக் கொண்டான். 'இவளுடைய கொட்டத்தை அடக்கியே தீருவேன்' என்று.

அரண்மனையை விட்டு வெளி வந்தவன் தான் தங்கியிருந்த சத்திரத்துக்குப் போனான். ராஜ உடைகளைக் களைந்தான். முரட்டுத் துணியினாலான கிழிந்த ஆடைகளை அணிந்து கொண்டான். இப்போது அவனை அவன் தாயாருக்குக்கூட அடையாளம் தெரியாது. அப்படி உருமாறி இருந்தான்.

அதே ஊரில் ஒரு பெரிய பண்ணையாள் இருந்தான். அவனிடம் ஏராளமான ஆடு, மாடு, கோழி, வாத்து ஆகியவை இருந்தன. அரண்மனைக்கு உணவுப் பொருள் விநியோகிக்கும் பொறுப்புள்ளவன் அவன். தன்னுடைய வாத்துக்களை மேய்த்துப் பாதுகாக்க ஒரு வேலைக்காரனைத் தேடிக் கொண்டிருந்தான். ஏழை போல் உருமாறிய இளவரசன் அந்தப் பண்ணையாளிடம் போய்த் தனக்கு அந்த வேலையைத் தரும்படி கேட்டான். வாட்டசாட்டமான வாலிபனாக இருந்ததைக் கண்ட அவன் உடனே தன் வாத்து மந்தையை அவனிடம் ஒப்படைத்தான்.

மறு நாள் வாத்துக்களை ஓட்டிக் கொண்டு கர்வம் பிடித்த இளவரசி வசித்த அரண்மனையை அடுத்திருந்த மலையடிவாரத்துக்குக் கிளம்பினான். அங்குதான் வாத்துக்களுக்கான ஒரு பெரிய ஏரியும் புல்வெளியும் இருந்தன. வாத்து மேய்ப்பவன் போகும் போதே ஒரு பந்தைத் தூக்கிப் போட்டுப் பிடித்துக் கொண்டே போனான். சூரிய ஒளி பட்ட அந்தப் பந்து பளபளவென்று ஒளி சிந்திச் சிரித்தது. ஏனென்றால் அது தங்கத்தினாலான பந்து.

அரண்மனையின் உப்பரிகையில் நின்றபடி கூந்தலைக் கோதி உலர்த்திக்கொண்டிருந்த இளவரசி பளீர் பளீர் என்று மின்னும் ஒளியைக் கண்டு கீழே பார்த்தாள். வாத்து மேய்ப்பவன் தூக்கிப் போட்டுப் பிடிக்கும் தங்கப் பந்தைக் கண்டாள். உடனே அதைத் தன்னுடையதாக்கிக் கொள்ளச் சேடிப் பெண்ணை அவனிடம் அனுப்பினாள்.



''விற்பதற்கான பந்துதான் இது. விலையும் கூட மலிவுதான். உங்கள் இளவரசி தான் அணிந்துள்ள தாவணியை எனக்குக் கொடுப்பாளானால் நான் இந்தத் தங்கப் பந்தைத் தருவேன்'' என்றான் இளவரசன் பணிப் பெண்ணிடம்.

''பூ! இவ்வளவுதானே? இதைப் போல எத்தனையோ தாவணிகள். இந்தா, இதைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டுப் பந்தை வாங்கி வா'' என்றாள் இளவரசி.

தாவணியுடன் வந்த சேடிப் பெண்ணைக் கண்டு சிரித்தான் வாத்து மேய்ப்பவன். ''தங்கப் பந்து யாருக்கு வேண்டுமோ அவர்களே வந்து நான் கேட்கும் பொருளைக் கொடுத்து விட்டு வாங்கிப் போக வேண்டுமாக்கும்'' என்றான். அதைக் கேட்டு இளவரசி முதலில் முகம் சுளித்தாலும் பந்தின் மீதுள்ள ஆசையினால் பணிப் பெண்ணுடன் மலையடிவாரத்துக்குப் போய் அவன் கேட்ட தாவணியைக்கொடுத்து விட்டுத் தங்கப்பந்தை வாங்கிக் கொண்டு திரும்பினாள். வாத்து மேய்ப்பவன்ராஜ குமாரியின் தாவணியைத் தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டு வாத்துக்களை ஓட்டியபடி வீடு திரும்பினான். பார்த்தவர்கள் எல்லாம், ''ஏய்! அது இளவரசியின் தாவணி அல்லவா?'' என்று கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

அடுத்த நாள் வாத்து மேய்ப்பவன் கையில் வெள்ளியினாலான முகம் பார்க்கும் கண்ணாடியும் தங்கச் சீப்பும் காட்சியளித்தன. அந்தக் கண்ணாடியைப் பார்த்தபடி தன் தலை முடியை வாரிக் கொண்டு போனான். சூரிய ஒளி பட்டுக் கண்ணாடியும் சீப்பும் தகதகத்தன. இளவரசியின் கவனத்தைக் கவரக் கேட்க வேண்டுமா?

''அவைகளை விற்கும் எண்ணம் உண்டா?'' என்று அவனிடம் கேட்டு அனுப்பினாள் பணிப் பெண் மூலம்.

''விற்பனைப் பொருள்கள்தான். ஆனால் உங்கள் இளவரசியை என் இருப்பிடம் வந்து, தன் கழுத்தில் அணிந்திருக்கும் முத்து மாலையைக் கழற்றிக் கொடுத்து விட்டு இதை வாங்கிப் போகச் சொல்லுங்கள்!'' என்றான் ஏழை வேஷத்திலிருந்த இளவரசன்.

அதைக் கேட்ட கர்வியான ராஜ குமாரி முகம் கடுத்தாள். ஆனால் மாற்று வழி எதையும் அவன் ஏற்றுக் கொள்ள மறுக்கவே சேடிகளுடன் அரண்மனையை விட்டுக் கிளம்பி மலையடிவாரத்துக்குப் போய் மாலையைக்



கழற்றிக் கொடுத்துவிட்டுக் கண்ணாடியையும் சீப்பையும் வாங்கிக்கொண்டு திரும்பினாள். வாத்து மேய்ப்பவனின் கழுத்தில் மின்னிய முத்து மாலையைக் கண்ட ஊரார், "பார்த்தாயா, இளவரசி தன்னுடைய முத்து மாலையையே இவனுக்குக் கழற்றிக் கொடுத்திருக்கிறாள்!" என்று வியப்போடு பேசிக் கொண்டு போனார்கள்.

மூன்றாம் நாள் வாத்து மேய்ப்பவனின் கையில் ஒரு விநோதமான பெட்டி இருந்தது. அதன் மீது அழகழகான நாட்டிய மாதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். பெட்டியின் பக்கவாட்டில் ஒரு கைப் பிடி இருந்தது. அதைச் சுழற்றினால் அந்த நாட்டியப் பதுமைகள் அற்புதமாக ஆடின. அது மட்டுமா? பெட்டியிலிருந்து இனிமையான இசையும் எழுந்தது. பொம்மைகளோ கொள்ளை அழகு. அவை ஆடுவதோ அதைவிட அற்புதம். இத்தகைய அதிசயப் பொருளை விட்டுவிடுவாளா இளவரசி? அதற்கு என்ன விலை கேட்டாலும் கொடுத்து வாங்கிவிடுவது என்று முடிவு செய்துவிட்டாள். ஆனால் இந்தத் தடவை அவன் கேட்டதோ ...? அவள் முகமெல்லாம் சிவந்துவிட்டது. அதைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டான். அதையும் கூட்டாமல் குறைக்காமல் அவன் இருக்குமிடம் போய்க் கொடுக்க வேண்டுமாம். அப்படி அது என்ன பொருள் என்கிறீர்களா? இளவரசி எண்ணி இருபத்தைந்து முத்தங்களை அவனுக்குக் கொடுப்பாளானால் அந்த நாட்டியப் பொம்மைகள் உள்ள வாத்தியப் பெட்டியைத் தருவானாம் அவன்!

"சச்சீ! வாத்து மேய்ப்பவனையா நான் போய் முத்தமிடுவேன்? அவன் வாத்தியப் பெட்டி அவனிடமே இருக்கட்டும். என் முத்தம் என்னிடமே!" என்றாள் இளவரசி. ஆனால் மலையடி வாரத்தில் புல்வெளியில் அமர்ந்திருந்த வாத்துக்காரனோ தன் வாத்தியப் பெட்டியை இயக்கிக் கொண்டே இருந்தான் மீண்டும் மீண்டும். காற்றிலே மிதந்து வந்த இனிய கானம் இளவரசியைத் துளைத்தெடுத்தது. அந்த இசையைக் கேட்கக் கேட்க அந்த அதிசயப் பேழையை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்ற வெறி வளரலாயிற்று. 'முத்தம்தானே! அதுவும் யார் பார்க்கப் போகிறார்கள்? போனால் போகிறது' என்று தன் அந்தரங்கத் தோழிப் பெண்ணுடன் கிளம்பிவிட்டாள் — வாத்து மேய்ப்பவனுக்குத் தன் முத்தங்களைக் கொடுத்து வாத்தியப் பெட்டியை வாங்கி வர.

அதே சமயத்தில் அரசருடைய காதருகில் சிலர் கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர். "இளவரசியே விரும்பிக் கொடுத்திருக்கிறாள். பொய்யல்ல. ராஜகுமாரியின் தாவணியை அவன் தன் தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டிருக்கிறான். இளவரசியின் கழுத்திலிருந்த முத்து மாலை அவன் கழுத்தில்."

"என்ன, அப்படியா? கிளம்புங்கள் அந்த வாத்து மேய்ப்பவனைப் பார்த்து வரலாம்" என்று பரிவாரங்களுடன் புறப்பட்டுவிட்டார் மன்னர். மலையடிவாரத்துக்கு அவர் வந்தபோது ஒரு மல்லிகைப் புதருக்கு மறு பக்கத்திலிருந்து குரல் வந்து கொண்டிருந்தது— "இருபத்தி ஒன்று, இருபத்தி இரண்டு, இருபத்தி......" என்ன இது என்று வியப்படைந்த அரசர் புதர் மேலாக எட்டிப் பார்த்தார். அங்கே...! மன்னருக்கு எப்படி இருக்கும்? 'எத்தனை அழகழகான அரச குமாரர்களையெல்லாம் குறைகூறி அனுப்பினாள்? இப்போது இப்படி இங்கே ஒரு வாத்து மேய்ப்பவனுக்கு வெட்கமில்லாமல் முத்தமிட்டுக் கொண்டு. சேச்சே! இவனைத்தான் பிடித்திருக்கிறது என்று சொன்னால் நானே இதற்கு ஏற்பாடு செய்திருப்பேனே?' இப்படிக் கொதிப்படைந்த




வர் உடனே தன் மந்திரியைக் கூப்பிட்டார். அந்த விநாடியே அவ்விருவருக்கும் அங்கேயே திருமணம் செய்து வைத்தார்—அவர் நல்லவரானதால். ''ஆனால் இனி அவள் என் அரண்மனையில் வந்து வசிக்கக் கூடாது, வாத்து மேய்க்கும் கணவனோடு போய்விட வேண்டும்'' என்று மட்டும் கட்டளையிட்டார்.

பாவம், இளவரசி! எத்தனை கர்வமாக இருந்தாள். அவளுக்கு இப்படியா மணாளன் கிடைக்க வேண்டும்?

வாத்து மேய்ப்பவன் மட்டும் சந்தோஷப்பட்டானா? இல்லை. ''இவளுக்குச் சமைக்கத் தெரியுமா? வீடு கூட்டிப் பெருக்கி மெழுகத் தெரியுமா? இவளைக் கட்டிக் கொண்டு அவஸ்தைப்படுவது யார்?'' என்றான். ஆனால் வேறு வழி? 'முரண்பட்ட இரண்டு மாடுகளையும் ஒரே நுகத்தடியில் மாட்டியாகிவிட்டது. வாழ்க்கைச் சுமையை எப்படியோ இவளோடு சேர்ந்து இழுத்துத்தான் ஆகவேண்டும்' என்று பெருமூச்சுவிட்டபடி வீட்டுக்குக் கிளம்பினான், தன் நாட்டுக்கு. இளவரசியும் அவனைத் தொடர்ந்து நடக்கலானாள். முடிவில் அவர்கள் ஓர் ஊருக்கு வந்தார்கள்.

அரண்மனையில் வசித்தவள் ஒரு மோசமான குடிசையின் முன்னால் நின்றாள். அதுதான் அவளுடைய கணவனின் அரண்மனை. குனிந்தபடி உள்ளே புகுந்தபோதும் அவள் தலையில் குடிசைக் கம்பு குத்தியது. உயர்ந்த ஆடைகளைக் களையச் செய்து, முரட்டுத் துணியாலான ஆடைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னான். அவள் கண்களிலிருந்து வழியும் நீர் நிற்கவேயில்லை.

''இதோ பார், இப்படிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. உன்னை மணந்து கொள்ள நான் பிரியப்படவும் இல்லை. நீ என் மனைவியாக வாழ்வதில் எனக்கும் சுகமுமில்லை. ஆனால் நடந்த பிறகு எதையும் விமரிசிக்கக் கூடாது. இதோ, இந்தக் கூடை நிறைய வாத்து முட்டைகள் இருக்கின்றன. இதைக் கொண்டு போய்ச் சந்தையில் விற்றுவிட்டு வா, போ'' என்று அவள் கையில் ஒரு தூக்குக் கூடை நிறைய முட்டைகளைக் கொடுத்தான்.

இளவரசி, அழுத கண்ணும் சிவந்த மூக்குமாக நகரத்தின் சந்தையில் முட்டைக் கூடையோடு நின்றாள். அவள் அதுவரை சந்தையைப் பார்த்ததுகூட இல்லை. எப்படிப் பொருள்களை விற்பது வாங்குவது என்றும் அவளுக்குத் தெரியாது. கூட்டத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றவள் மீது தலை தாங்காமல் வாழைத் தார்களைச் சுமந்தபடி வந்த ஒரு நாட்டுப்புறத்தான் வந்து மோதினான். முட்டைக் கூடை தரையில் சிதறியது. ஒரு முட்டைகூட முழுசாக இல்லை. இளவரசிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டு கண்ணீர் விட்டாள். இந்த நிலையில் எப்படிக் கணவன் முன்னால் போவது என்று நடுங்கினாள்.

''எனக்குத் தெரியுமே, நீ எதற்கும் லாயக்கற்றவள் என்று'' என்றான் வாத்து மேய்ப்பவன் கடுப்புடன். ''பார்க்க அழகாக இருந்தால் போதுமா? கண்ணாடி ஜாடியைக் கட்டிக் கிணற்றில் நீர் மொள்ள முடியுமா? சுத்த உதவாக்கரையான உன்னைப் போய்க் கல்யாணம் செய்து கொண்டேனே? என் தலையெழுத்து! சரி சரி... மரம் மாதிரி நிற்காதே, போய்த் தொலை. நாளைக் காலையில் அந்தக் கூடையில் உள்ள தக்காளிப் பழங்களைக் கொண்டு போய்ச் சந்தையில் விலையாக்கிக் கொண்டு வா. போ... போ—'' என்று விரட்டியடித்தான்.

தக்காளிக் கூடையோடு சந்தைக்குப் போனவளோடு துரதிர்ஷ்டமும் தொடர்ந்தது. சந்தையில் எந்தச் சாமானை எங்கே வைத்து வியாபாரம் செய்வதென்று அவளுக்குத் தெரியுமா? ஆட்டு மந்தையை ஓட்டி வந்தான் ஒருவன். தக்காளிக் கூடையை ஆடுகள் உருட்டி உருத் தெரியாமல் செய்துவிட்டுப் போயிற்று. பாவம், அரச குமாரி. பிழியப் பிழிய அழுதபடியே முந்தானையில் முகத்தை மூடிக் கொண்டு வீடு திரும்பினாள்.

''சுத்த உதவாக்கரை! கடைசியாக ஒரு சந்தர்ப்பம். இந்த ஊர் ராஜாவுக்குக் கல்யாணமாம். நாளைக்கு மிகப் பெரிய விருந்து. சமையலடியில் நீர் இறைத்துத் தரவும் மற்ற எடுபிடி வேலைகளுக்கும் ஆள் எடுப்பார்கள். நீ நாளைக்குப் போனாயானால் அவர்களில் ஒருத்தியாக உன்னையும் எடுத்துக்கொள்வார்கள். அங்கு ஒழுங்காக உழைத்து விட்டு வரும்போது — இதோ இந்தக் கூடை நிறைய அங்கு விருந்தில் மிச்சம் மீதமுள்ள பதார்த்தங்களைச் சமையல்காரரிடம் கேட்டு வாங்கி வா'' என்று அவளிடம் ஒரு தூக்கைத் திணித்தான், வாத்து மேய்த்த வாலிபன்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து அரண்மனைச் சமையல்கட்டுக்குப் போனாள் அரச குமாரி. அங்கு நாளெல்லாம் குடம் குடமாக நீர் சேந்திக் கொட்டினாள். விறகு பிளந்து கொடுத்தாள். சமையலுக்கான பதார்த்தங்களை இடித்து, அரைத்துக் கொடுத்

தாள். சக்கையாக வேலை வாங்கிக் கொண்டார்கள். முடிவிலே சமையற்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடித் தன் கணவருக்காக என்று விருந்துச் சமையலிலே மிச்சம் மீதியைக் கொடுக்கும்படி கேட்டு வாங்கிக் கொண்டவள் வீட்டுக்குச் செல்லக் கிளம்பினாள். வெளியே வந்தபோது இரண்டு வீரர்கள் அவளை வழிமறித்தார்கள். அவள் பயந்து நடுங்கியபடியே முந்தானையால் தன் பாத்திரத்தை மூடிக் கொண்டாள்.

''ஏய், நீதானே இன்று விருந்துக்குச் சமையலடியில் கூடமாட இருந்து வேலை செய்த பெண்?'' என்று கேட்டான் ஒரு வீரன்.

''ஆமாம்'' என்று சொல்ல நினைத்தவளுக்கு வார்த்தைகள் வாயில் உருவாகவில்லை. தலையை மட்டும் ஆட்டினாள்.


''எங்களோடு வா...'' என்று அவளுக்கு முன்னும் பின்னுமாக நடந்தார்கள் வீரர்கள். 'அழுது அடம் பிடித்துக் கத்தினாலும் பயனில்லை. கணவன் காத்திருப்பான் வீட்டிலே என்று வாதாடினால் இவர்கள் கேட்கவா போகிறார்கள்? அழைத்து வரும்படி அரச ஆணையாம். போவதைத் தவிர வேறு வழியில்லை' என்று மௌனமாகக் கண்ணீர் சிந்தியவாறு நடந்தாள்.


அவளை வீரர்கள் அரண்மனையின் தர்பார் மண்டபத்துக்குக் கூட்டிப் போனார்கள். அங்கு அரசர் கம்பீரமாகப் பொன்னாசனத்தில் பொலிவோடு வீற்றிருந்தார். அவர் தலையில் ரத்தினக் கிரீடம் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. ஆனால் பாவம் கர்வியாக இருந்த இளவரசி இவைகள் எதையும் யாரையும் கண்ணெடுத்தும் காணவில்லை. காற்றில் நடுங்கும் இளம் தளிரைப் போல் நடுங்கியபடி தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள்.

''முந்தானையால் எதையோ மூடி மறைத்துக் கொண்டிருக்கிறாயே, அது என்ன?'' என்று கேட்டது ஒரு கம்பீரமான குரல். சிங்காதனத்தில் வீற்றிருந்த அரசர்தான் கேட்டார். ஆனால் இளவரசி அதற்குப் பதில் ஏதும் கூறவில்லை. எப்படிக் கூறுவாள்? இதற்குள் அருகிலிருந்த ஒருவன் மூடியிருந்த பாத்திரத்திலிருந்து அவள் முந்தானையை விலக்கினான். சபையிலே 'ஹோஹோ' என்று ஏளனமான சிரிப்பொலி அலை அலையாக எழுந்தது. இளவரசியின் இதயம் அவமானத்தினால் வெந்து போயிற்று. அப்படியே பூமி பிளந்து தன்னை விழுங்கி விடாதா என்று துடித்து உடல் துவளக் கண் மூடித் தலை குனிந்து நிற்கும் அவளை யாரோ தொட்டு உலுக்கினார்கள். ''என்னை உனக்குத் தெரியவில்லையா?'' என்றும் கேட்டார்கள். ''நான்தான் உன் கணவன். வாத்து மேய்ப்பவனாக வந்து உன்னை மணந்தவன்'' என்றது அந்தக் கம்பீரமான குரல். அரசகுமாரி தலைநிமிர்ந்து பார்த்தாள். சிங்காதனத்திலே உட்கார்ந்திருந்தவர் அவள் அருகிலே நின்று கொண்டிருந்தார். அவள் கண்ணீரிடையே ஜாஜ்வல்யமாக ஜ்வலித்துக் கொண்டு நிற்பவர் அவள் கணவர்தான்! அந்த நாட்டு மன்னரும் அவர்தான்.


''பட்டிக்காட்டானாக வந்து உன் முட்டைக் கூடையைத் தட்டி விட்டவனும் நான்தான். ஆட்டிடையனாக வந்து தக்காளிப்பழங்களை நாசமாக்கியவனும் நான்தான்'' என்று அரசகுமாரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் குனிந்து அவன் காலடியில் விழுந்து, ''என் கர்வம் ஒழிந்தது. இனியும் என்னைச் சோதிக்காதீர்கள்'' என்று விம்மினாள்.

''என் இதயம் கவர்ந்த நீ இனி இந்நாட்டின் ராணியும் கூட, வா'' என்று அவளைத் தூக்கி அணைத்தபடி அழைத்துப் போய்ச் சிங்காதனத்தில் தன் அருகே அமர்த்திக் கொண்டபோது சபையோர் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள்.





பழைய பாலுவும்
பாட்டில் பூதமும் 4
கதை: வாண்டு — சித்திரம்: செல்லம்
பாலுவும் பூதமும் பீச்சுக்குப் போகிறார்கள்
ஷேர்தில்! அதோ பீச்சுக்குப் போற பஸ் நிற்கிறது, சீக்கிரம் ஓடி வா.
பாலு ஓடிப்போய் பஸ்ஸில் தொத்திக் கொண்டு விடுகிறான். ஷேர்தில் ஏற முயன்றபோது....
ஏய்! காட்டாள். இறங்கப்பா. ஒடற பஸ்ஸிலே ஏறாதே. அடுத்த பஸ்ஸிலே வா.
என்னைத் தள்ளிவிட்டுப் பஸ்ஸைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டானே! என் பிரபு தனியாகப் போகிறார்... இருக்கட்டும் இதோ...
ஏய்...! ஏய்...! ஐயோ, என் குதிரை
வரு... வ்வரு...வரு...வ்ரா! சீக்கிரம் ஓடு... ஜல்தி...
ஐயையோ! என் குதிரை... என்... தக்காளிப் பழம்...
என்ன வாத்யாரே! நம்ம கட்டிய உன் வேலையைக் காட்டினியா? இப்போ என்ன சொல்றே?
வரு ரே... ஷேர்தில், சபாஷ்...
என்னைப் பிடிச்சுக் கீழே தள்ளினில்ல...
ஷேர்தில் எனக்கு ரொம்ப நாளா ஆசை கண்டக்டர் போல டிக்கெட் கொடுத்து "உய் உய்"னு விசில் அடித்து ரைட் தரணும்னு...
உங்கள் ஆசையை நிறைவேற்றித் தொன் தருகிறேன்



கடற்கரையில் பாலு மணலில் கோட்டை கட்டிக் கொண்டிருந்தபோது
ஏய் பொடியா! இங்கே என் போர்டை வைக்கணும். வேறு இடம் பார்த்து உன் கோட்டையைக் கட்டு.
விசைப் படகில் உல்லாசக் கடல் பிரயாணம் செய்ய ரூ 1-50
அந்த ஆள் நான் கட்டிய கோட்டையைப் பாழாக்கி விட்டான்.
உன்னை விட மாட்டேன். தெரிந்ததா?
விசைப் படகுக்காரன் மோட்டாரை முழு வேகத்தில் செலுத்தினான். ஆனால் பூதத்தின் பலத்தின் முன்னே மோட்டார் என்ன செய்யும்?
ஷேர்... இழு இழு... ம்... விடாதே!
ம்.. அழகாகக் கட்டு... பெரிய கோட்டையாகக் கட்டிக்கொடு என் எஜமானருக்கு.
கடல்நீரில் படகில் உட்கார்ந்தபடி மிதப்பது ரொம்ப ஜாலியாக இருக்கிறது ஷேர்தில்.
போய் வா! இனி குழந்தைகளிடம் இப்படி யெல்லாம் வாலாட்டாதே தெரிந்ததா?
கோட்டை அகழி எல்லாம் பிரமாதம் ஷேர்தில்! கோட்டை மீது மூவர்ணக் கொடியை ஏற்றுகிறேன்.
தொடரும்

RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக்கணக்கை தாமே நடத்த

உதவி

— கைலாஷ்

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்த போது ஓர் உள்நாட்டுப் போர் மூண்டது. வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையே மூண்ட அந்தப் போர் நான்கு ஆண்டுகள் வரையில் நடந்தது.


அப்போது ஒரு நாள் ஓர் இளைஞன் தன் அணியைக் காவல் காத்துக்கொண்டிருக்கும் போது தூங்கிவிட்டான். அது கண்டுபிடிக்கப்பட்டு அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை ஜனாதிபதியால் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டுமாகையால், விவரங்கள் லிங்கனுக்குத் தெரிவிக்கப்பட்டன.

ஒரு கிராமத்தில் வசித்து வந்த கிளாரா என்ற பெண்ணின் தந்தைக்கு ஒரு கடிதம் வந்தது.

'அன்புடைய அப்பா,

இந்தக் கடிதம் உங்கள் கைக்குக் கிடைத்து ஓரிரு நாட்களில் நான் சுடப்பட்டு விடுவேன். போரில் வீரமரணம் கிடைப்பதற்குப் பதிலாக என்னை ஒரு நாயைப் போலக் கட்டி வைத்துச் சுட்டுவிடுவார்கள். உங்களுக்கெல்லாம் நான் தலைகுனிவை உண்டு பண்ணிவிட்டேன். அதற்குக் காரணம், காவலில் தூங்கிவிட்ட எனது அஜாக்கிரதைதான்.

இவ்வாறு எப்படி நேர்ந்தது என்பதை உங்களுக்கு நான் எழுதுகிறேன். தெரிந்தால் உங்கள் துயரம் சற்றுக் குறையலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய அடுத்த வீட்டு டேவிட்டின் தாய்க்கு அவனைப் பார்த்துக் கொள்வதாகப் போருக்குப் புறப்படும்போது நான் வாக்களித்தேன்.



அவன் இங்கு வரும்போதே உடல் சுகமில்லாமல் படுத்துவிட்டான். அவனுக்கு என்னால் இயன்ற அளவு உதவி செய்தேன். இப்படியிருக்கும்போது, எங்கள் அணி ஓர் இடத்திலிருந்து வேறு ஓர் இடத்துக்கு நடந்தே போகவேண்டியதாயிற்று.

நான் என்னுடைய சாமான்களோடு டேவிட்டின் சாமான்களையும் சுமந்து கொண்டு நடந்தேன். நடுநடுவே அவனையும் தாங்கிக் கொள்ள வேண்டி வந்தது.

இங்கு வந்து சேர்ந்தவுடன் இரவு காவல் பணி ஆற்றும்படி டேவிட்டுக்குக் கட்டளை இடப்பட்டது. அவனால் இயலாது என்று அவனுக்குப் பதில் நான் காவல் காத்தேன். களைப்பு அதிகமாக இருந்தபடியால் நான் என்னை அறியாமல் கண்ணயர்ந்து விட்டேன்.

எனது மேல் அதிகாரி மிகவும் நல்லவர். ஆனால், பாவம்! அவர் அவருடைய கடமையைச் செய்தார். சட்டப்படி நடந்தாக வேண்டும் அல்லவா! இருந்தாலும் இந்தக் கேவலம் தாங்க முடியாத ஒன்று. மரணத்தைச் சந்திக்கக் கடவுள் எனக்குத் தைரியத்தைக் கொடுக்கட்டும். அம்மாவையும் கிளாராவையும் தேற்றுங்கள். நான் மீண்டும் உங்களைப் பார்க்க வரமாட்டேன்.

தங்கள் அருமை மகன்

அன்று இரவு கிளாரா அந்தக் கடிதத்தோடு யாரிடத்திலும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுச்சென்றுவிட்டாள். ரயிலில் ஏறி எப்படியோ வாஷிங்டனை அடைந்துவிட்டாள்.


நேராக லிங்கனிடம் சென்று நின்ற அவளை அவர் வியப்புடன் பார்த்தார்.

''ஐயா! என் அண்ணன் டேவிட்டுக்கு உதவி செய்வதற்காக, காவல் காத்தான். அவனைத் தயவு செய்து விட்டுவிடுங்கள்.''

''குழந்தாய்! நீ யார்? உன்னுடைய அண்ணன் யார்? டேவிட் என்பது யார்?'' லிங்கன் அவளைத் தட்டிக் கொடுத்தபடி கேட்டார். கிளாரா அவரிடம் கடிதத்தைக் கொடுத்தாள். அதைப் படித்த லிங்கனின் கண்கள் கலங்கின. சேவகனை அழைத்த அவர் அவன் மூலம் தந்திஒன்றை அனுப்பினார்.



''குழந்தாய்! உன் அண்ணன் விடுவிக்கப்படுவான். பிறருக்கு உதவி செய்யப் போய்த் தன் உயிர் போகும் நிலை வந்தபோதும்கூட, யாரையுமே குறைகூறாத ஒரு சிப்பாய் சுடப்படக் கூடாது.'' கிளாராவின் முகம் மலர்ந்தது.


ஆஞ்சநேயா! அன்பின் ஆவேசத்தில் நீ தவறாகப் பேசுகிறாய். ராவணனை வதம் செய்து என்னை ஸ்ரீராமரே மீட்டுச் செல்வது தான் அவருக்குப் புகழ் தரும்.
ராவணன் என்னைத் திருட்டுத் தனமாகத் தூக்கி வந்ததைப் போல நீயும் தூக்கிச் செல்வ பிற புருஷனை உன் முதுகில் அமர்ந்து நான் வரலாமா?
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
தாயே, அவசரப்பட்டுப் பேசிய என் பிழையைப் பொறுத்தருள வேணும். ஒரு கற்பரசி பேச வேண்டிய படி தாங்கள் பேசினீர்கள்.. உங்களை நான் கண்ட அடையாளமாக அணிகலன் ஏதாவது கொடுத்தருள வேண்டும்.
மாருதி, உன் மீது எனக்கு வருத்தமே இல்லை. இந்தச் சூடாமணியை என் பிராணநாதரிடம் கொடு.
வாழும் பயிருக்கு மழை எனவந்த மாருதியே, விரைவில் அவருடன் வா. உனக்கு மங்களம் உண்டாகட்டும்.



சீதாதேவியிடம் விடை பெற்றுக் கொண்ட ஹனுமான் அசோக வனத்தின் வெளியே நீங்கி வந்தார்.
தேவியைக் கண்டாயிற்று. எதிரியின் படைபலத்தை அறிந்தாக வேண்டும். வலுச்சண்டையை ஆரம்பித்துத்தான் அதை அறிந்தாக வேண்டும் போலும்.
அழகிய அசோக வனத்தை நாசம் செய்யவே, காவலர்கள் பீதியடைந்து ராவணனிடம் முறையிட ஓடுகின்றனர்.
ஒரு பெரிய குரங்கு அசோக வனத்தை அழித்துச் சுடு காடாக்கிக் கொண்டிருக்கிறது
என்ன? ஓர் அற்ப குரங்குக்கா அத்தனை அமளிக்கள்? எண்பதினாயிரம் வீரர் வருவார். நீங்கள் போகலாம்
நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்?
என் பெயர் ஹனுமான். சுக்ரீவனின் மந்திரி. ஸ்ரீராமனின் தூதன். சீதா தேவியின் இருப்பிடம் அறிய வந்தேன். விரைவிலேயே பெரும் படையுடன் இங்கு மீண்டும் வருவோம். இப்போது விடை பெறுகிறேன்.
நீ திரும்பிச் செல்ல முடியாது. யமனுலகுக்குத்தான் உன்னை அனுப்பி வைப்போம்
யமனுலகத்துக்கு யார் போகிறார்கள் என்று பாருங்கள்.. ஹ.. ஹ.. ஹா..
தொடரும்



லவ்லஸ் எஜமானரிடம் கூலிக்கு வாதாடுகிறார்.

தொழிற்சங்கங்கள்

இன்று நம் நாட்டில் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தொழிற்சங்கம் இருக்கிறது. 'டிரேட் யூனியன்' என்ற ஆங்கில வார்த்தை எந்த ஒரு தொழிலாளிக்கும் தெரியும், அதன் செயல் முறை என்ன என்றும் புரியும்.

தொழிலாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் முதலாளிகளிடமிருந்து பாதுகாத்துக் கொடுக்கும் ஓர் அமைப்புக்குத் தொழிற்சங்கம் என்று பெயர். இதில் அங்கத்தினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, வேலை நேரம், வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றுக்காக இந்த யூனியன் பாடுபடும். இது இயங்குவதற்குப் பொருள் வேண்டாமா ? சங்கத்தின் நிர்வாகச் செலவுகளுக்கு எப்படிப் பணம் கிடைக்கிறது? ஒவ்வொரு தொழிலாளியும் தனது வருவாயில் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் இத்தகைய யூனியன்கள் இயங்குவதற்கு வழங்குகிறார். இப்படி இயங்கும் பல சங்கங்கள் தேசிய அடிப்படையில் ஒருங்கிணைந்து நாட்டு நலனில் அக்கறையோடு திட்டங்கள் தீட்டிச் செயல்பட வேண்டும்.

இத்தகைய தொழிற்சங்கங்களின் பிறப்பு எங்குஎப்போது ஆரம்பமாயிற்று? பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டனில்தான் இந்த இயக்கத்தின் வித்து ஊன்றப்பட்டது. இங்கிலாந்திலுள்ள தொழிலாளர்கள் அப்போது இப்படி ஓர் அமைப்பை உருவாக்கப் பல முறை முயன்றார்கள். ஆனால் பார்லிமெண்ட் அதற்கு இணங்கவில்லை. இத்தகைய சங்கங்கள் பலம் பெறுமானால் அது அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வலிமை பெற்றுவிடும் என்று பயந்தார்கள். தொழிலாளர்களும் தங்கள் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. கடைசியாக 1824ல் இங்கிலாந்து நாட்டுப் பார்லிமெண்ட் தொழிற் சங்கங்கள் ஏற்பட அனுமதியளித்தது. இதற்காகப் போராடியவர் பிரான்ஸிஸ் பிளேஸ் என்பவர். அனுமதி கிடைத்ததே தவிர பலம் கொண்ட அமைப்பாக உருவாகவில்லை.

தொழிற் புரட்சியினால் இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் ஏற்பட்டிருந்த ஏராளமான புதிய தொழிற்சாலைகளை மக்கள் மொய்க்கலானார்கள். அதுபோல் தெற்குப் பகுதியிலுள்ள பயிர் செய்யும் நிலங்களிலும் பெரிய மாறுதல் ஏற்பட்டது. சிறிய துண்டு நிலங்களில் பரம்பரையாக உழைத்து உற்பத்தி செய்து தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றிய குடியானவர்களிடமிருந்து பெரிய நிலச்சுவான்தார்கள் அவைகளை எடுத்துக் கொண்டார்கள். நிலங்களை ஒட்டுமொத்தமாக உழுது பயிரிடப் புதிய யந்திரங்கள் வந்துவிட்டதால் மனித உழைப்பில் நாலில் ஒரு பங்குகூடத் தேவைப்படவில்லை. தங்கள் சிறிய நிலங்களை இழந்த குடியானவர்கள் பெரிய நிலச்சுவான்தாரர்களிடம் குறைந்த கூலிக்கு வேலை செய்ய வேண்டியதாயிற்று. மிக மிக மோசமான கூலி. வீடோ குடிசை, உணவோ கால் வயிற்றுக்கும் போதாத காய்ந்த ரொட்டி.

டார்செட் *(Dorset)* மாகாணத்தில் டோல்புடில் *(Tolpuddle)* என்று ஒரு கிராமம். இங்கிலாந்தில்தான். வயலில் வேலை செய்யும் குடியானவனுக்குக் கூலி, வாரத்துக்கு எட்டு ஷில்லிங்குகள். சில சுற்று வட்டாரக் கிராமங்களில் உள்ள தொழிலாளருக்குப் பண்ணைகளில் பத்து ஷில்லிங்குகள் கொடுத்தார்கள். இந்த ஏற்றத்தாழ்வான கூலியை எதிர்த்து ஒரே மாதிரியான கூலி தர வேண்டும் என்று டோல்புடில் கிராமத்துக் குடியானவர்கள் தங்கள் எஜமானர்களிடம் முறையிட்டார்கள். இதற்குத் தலைமை தாங்கினார் ஜார்ஜ் லவ்லஸ் என்ற விவசாயி முதலில் பண்ணையார்கள் மறுத்தாலும் பிறகு இவர்களுக்கும் வாரத்துக்குப் பத்து ஷில்லிங்குகள் தருவதற்கு இணங்கினார்கள். இரண்டு ஆண்டுக

ளான பின்பும் ஒப்புக் கொண்டபடி செயல்படுத்தவில்லை முதலாளிகள். பல முறை வாதாடியும் பலன் இல்லை. ஆகவே பண்ணைத் தொழிலாளிகள் உள்ளூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தங்கள் நிலையை விளக்கி நியாயம் வழங்கக் கோரி வழக்குத் தொடர்ந்தார்கள்.

நீதிபதி ஜேம்ஸ் ஃபிராம்ப்டன் என்பவர் ''எங்களைப் பொறுத்த வரையில் (நீதி மன்றத்தை) பண்ணையார் அவர்களுக்கு விருப்பமான ஊதியத்தைத் தங்கள் தொழிலாளிகளுக்குத் தரலாம். அவர்களைக் கட்டுப்படுத்த எங்களுக்கு அதிகாரம் இல்லை'' என்று தீர்ப்புக் கூறிவிட்டார். உடனே தொழிலாளர்களின் வாரக் கூலி எட்டிலிருந்து ஏழு ஷில்லிங்குக்குக் குறைந்துவிட்டது.

ஜார்ஜ் லவ்லஸ்ஸும் நண்பர்களும் புதிதாக உருவாகியுள்ள தொழிற்சங்கம் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆகவே சங்கத் தலைமை அலுவலகத்துக்குத் தங்கள் நிலையை விளக்கிக் கடிதம் எழுதினார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சங்கம் ஏற்படாத காலம் அது. ஆகவே டோல்புடில் கிராமத்து விவசாயிகளின் வேதனை போக்க; லேபர் யூனியன், விவசாயத் தொழிலாளர்களின் நண்பர் கழகம் (*Friendly Society of Agricultural Labourers*) என்றதோர் அமைப்பை 1833ம் ஆண்டு அக்டோபர் மாதம் துணைச் சங்கமாக நிறுவினார்கள்.

டார்செட் மாகாணப் பண்ணையார்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்காக இப்படியோர் சங்கம் ஏற்பட்டதை அறிந்து ஆத்திரம் அடைந்தார்கள். நீதிபதி ஜேம்ஸ் ஃபிராம்ப்டன் இதை நசுக்குவதற்கு உறுதி கொண்டார். சங்கத்தின் செயல் முறை பற்றி முதலில் தெரிந்து கொள்ளுவதற்காகத் தன் ஆட்களில் ஒருவனை எட்வர்டு லெக் என்பவனை அதில் அங்கத்தினனாக்கி வாராந்திரக் கூட்டமொன்றுக்கு அனுப்பி அங்கு நடப்பவற்றை அறிந்து வரச் செய்தார்.


சங்கத்தின் நடவடிக்கைகளை லெக் மூலம் தெரிந்து கொண்ட ஃபிராம்ப்டன் லண்டனில் உள்ள உள் விவகார மந்திரியான லார்டு மெல்போர்னுக்கு ஒரு கடிதம் எழுதினார். மெல்போர்ன் தொழிற்சங்கங்கள் பலம் அடைவதை வெறுப்பவர். ஆகவே அவர் ஃபிராம்ப்டனுக்கு உதவுவதாக வாக்களித்தது மட்டுமல்ல, தொழிலாளர்களை விசாரணைக்கு உட்படுத்தும் மிகப் பழங்காலச் சட்டமொன்றைக் குறிப்பிட்டு அதன்படி செயல்படும்படித் தூண்டினார்.

சட்டத்தைத் தனக்குச் சாதகமாக முறுக்கி அந்த ஏழை கிராமத் தொழிலாளிகளை அடக்கி அநீதி இழைக்க முனைந்துவிட்டார் அவர்.

1834ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு நாள் ஜார்ஜ் லவ்லஸ்ஸும் அவர் சகோதரர் ஜேம்ஸ் மற்றும் சங்க அங்கத்தினர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

பாரன் வில்லியம்ஸ் என்ற புதிய நீதிபதி இவர்களை விசாரணை செய்ய

லவ்லஸ்ஸும் தோழர்களும் நாடு கடத்தப்படுதல்.





ஒண்டிக்கு ஒண்டி





செண்டைக்கு ரெடி!

புகைப்படம்: நாரலிங்கம்


அனுப்பப்பட்டார். விசாரணை என்பது வெறும் கண் துடைப்பு நாடகம். கைது செய்யப்பட்டவர்களை ஏழாண்டுகள் ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தித் தண்டனை வழங்கினார்கள்.

இந்த அநீதியையும், வழக்கு நடத்திய முறையையும் கொடுக்கப்பட்ட தண்டனையையும் கேட்டுப் பிரிட்டிஷ் மக்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். நாடு கடத்தப்படுவது என்பது அந்தக் காலத்தில் மிகவும் கொடுமையான தண்டனை. வீடு வாசல் பெண்டு பிள்ளைகளை விட்டுக் கண்காணாத புதிய சூழ்நிலையுள்ள நாட்டுக்கு அனுப்பப்படுபவர்கள் மறுபடி திரும்பி வருவது மிக மிக அரிது.

நாடெங்கும் உள்ள தொழிலாளிகள் கொதித்தெழுந்தார்கள். தண்டனை பெற்றவர்களின் மனைவி மக்களைப் பட்டினியால் வாடாமல் வாழ்வதற்குத் திரட்டப்பட்ட நிதிக்கு நாடெங்கும் உள்ள தொழிலாளர்கள் தாராளமாக உதவினார்கள். அது மட்டுமல்ல, மெல்போர்ன், ஃபிராம்ப்டன் ஆகியோரின் சதியைச் சந்திக்குக் கொண்டு வருவதற்கும் போராட்டம் நடத்தினார்கள். மாபெரும் ஊர்வலங்கள் நடத்தினார்கள். எங்கும் டோல்புடில் புரட்சி பற்றியே பேச்சாயிருந்தது.

இரண்டு ஆண்டுகள் இடைவிடாத போராட்டத்துக்குப் பின் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்ட லவ்லஸ்ஸும் தோழர்களும் மன்னிக்கப்பட்டுத் திருப்பி அழைக்கப்பட்டனர். மக்கள் அவர்களை வீரர்களைப் போல் வரவேற்றார்கள். அவர்களிடம் அனுதாபம் கொண்டவர்கள் வழங்கிய நிதியில் எஸக்ஸ் மாகாணத்தில் ஒரு விவசாயப் பண்ணையையே வாங்கி அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார்கள். தொழிற்சங்கங்களின் பலத்தை உலகம் அறிந்து கொண்டது இப்படித்தான். ஜார்ஜ் லவ்லஸ் அன்று பட்டபாடு வீண் போகவில்லை. இன்று தொழிலாளிகள் சந்தோஷமாக வாழ்வதற்கு ஜார்ஜ் லவ்லஸ் நடத்திய போராட்டமே காரணம்.

— கிருஷ்ணவேணி




மூளைக்கு வேலை

மான்குட்டிக்கு வீட்டுக்குப் போக வழி தெரியவில்லையாம். கொஞ்சம் வழி காட்டுகிறீர்களா, உங்கள் பென்சில் முனையால்!

* * * * * *

ஒன்றிலிருந்து இரண்டுக்கு, இரண்டிலிருந்து மூன்றுக்கு — இப்படி இருக்கிற எண்களைக் கோடுகளால் இணைத்துப் பார்த்தால் தெரிவது யார்....?



மந்திரக் கம்பளம் ௫



வாண்டுமாமா

உதவி சமையல்காரன் கூறியதைக் கேட்ட மாணிக்கவர்மருக்குப் பேசவே நா எழவில்லை. நள சர்மாவிடம் அவர் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்களுள் அவனும் ஒருவன். சமையல் கலையில் வல்லவன். விதம் விதமான பதார்த்தங்களை வாய்க்கு ருசியாகத் தயாரிப்பதில் சமர்த்தன். அப்படிப் பட்ட நளசர்மாவுக்கு மாணிக்கவர்மர் பல சலுகைகளை வழங்கி இருந்தார். அப்படிப்பட்டவனா இப்படி ஒரு காரியம் செய்துவிட்டு ஓடிப் போயிருக்கிறான். அதுவும் எப்படி? இளவரசருடைய உடைமைகளைத் தூக்கிக் கொண்டல்லவா போய்விட்டான்? நடந்ததை விவரமாகக் கூறும்படி வற்புறுத்தினார் உதவி சமையல்காரனிடம். அவனும் நடந்தது நடந்தபடி கூறினான்.

''இளவரசர் சுருட்டிய ஜமுக்காளத்துடன் இந்தப் பக்கம் வந்தபோதுதான் நளசர்மா ஜீராவில் மிதக்கவிட்டிருந்த குலாப் ஜாமூன்களை ஒரு தடவை கிளறி விட்டுவிட்டு பதிர்ப் பேணிக்குப் பாலைச் சுண்டச் சுண்டக் காய்ச்ச உத்தர விட்டுக் கொண்டிருந்தார். அநேகமாக விருந்துச் சமையல் பூர்த்தியாகி இருந்தது. முகத்து வியர்வையைத் தோளிலிருந்த காசித் துண்டினால் துடைத்துக் கொண்டே இங்கு வந்தார் நளசர்மா. நானும் அவருடைய வெள்ளி வெற்றிலைப் பெட்டியுடன் பின்தொடர்ந்தேன். இன்னும் சிலரும் அவருடன் இங்கு வந்தோம். ஏனென்றால் சமையல் அறையில் எல்லா வேலைகளுமே முடிந்துவிட்டன.

''இங்கு வந்த நளசர்மா அதோ அந்த மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த இளவரசருடைய ஜமுக்காளத்தின் மீது போய் உட்கார்ந்தார். 'இன்னும் சற்று நேரத்தில் இலை போடலாம்' என்றவர், 'உஸ்... அப்பாடா!' என்று மேல் துண்டைச் சுற்றி விசிறிக் கொண்டே, 'இங்கு வந்து இருபது வருஷங்களுக்கு மேல் ஆகப் போகிறது. என்ன உழைப்பு? எத்தனை விருந்துகள், கேளிக்கைகள், கொண்டாட்டங்கள்.... போதுமடா சாமி....! மந்தஹாஸ மகாராஜாவுக்கு இப்படி நான் உழைத்திருந்தேனானால்? என் கதையே வேறுவிதமாக இருந்திருக்கும். என்னை ஒரு சமஸ்தானாதிபதியாக்கி இருப்பார். ம்... எதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா? மந்தஹாஸர் நல்ல சாப்பாட்டுப் பிரியர். இந்தக் கணத்தில் நான் அவர் அவையில் — அவர் முன்னிலையில்—அவருக்குப் பால் போளி பரிமாறிக் கொண்டிருந்தேனானால் எப்படி இருக்கும்?' என்று அவன் சொல்லி முடிக்குமுன் வில்லிலிருந்து கிளம்பிய அம்பைப் போல் அவர் உட்கார்ந்திருந்த ஜமுக்காளம் குபீரென்று உயரக் கிளம்பியது— நளசர்மாவுடன். அதோ அந்தச் சாளரத்தின் வழியே விருட்டென்று வெளியே பாய்ந்து பறந்தது ஆகாய வீதியிலே. முதலில் நளசர்மா பீதியினால் 'ஓ' என்று கத்தினார். தடுமாறியவர் ஜமுக்காளத்தில் படுத்தபடி அதன் முனையை இறுகப் பற்றிக் கொண்டார். ஜமுக்காளத்தினுள்ளிருந்த அந்த மூட்டையும் அவர் அருகிலேயே இருந்தது.

நாங்கள் பிரமிப்படைந்து சாளரத்துக்கு ஓடினோம். வான வீதியிலே நளசர்மாவைச் சுமந்தபடி தெற்கு நோக்கி அந்தக் கம்பளம் மிதந்தபடி பறந்து போய்க் கொண்டிருந்தது. நாங்கள் பார்த்துக் கொண்டே நின்றோம். வேறு என்ன செய்வது, செய்ய முடியும்? கொஞ்ச நேரம் எங்களுக்கே ஒன்றும் புரியவில்லை. நளசர்மா அப்படிப் பறந்துபோனதை எங்களால் நம்பவே முடியவில்லை. இ து தா ன் நடந்த உண்மை'' என்று முடித்தான் உதவி சமையல்காரன்.

''சரி, நீ போகலாம்'' என்று அவனை அனுப்பினார் மாணிக்கவர்மர். பிறகு மௌனமாக நிலா மண்டபத்தை நோக்கி நடந்தார். அவர் உள்ளத்திலே பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது என்று ஒன்றுமே புரியவில்லை அவருக்கு. இளவரசன் அக்கினி அரக்கனைக் கொன்று அதன் தலையையும் வாலையும் ஒரு` துணி மூட்டையில் கொண்டு வந்து வைத்திருந்ததாகக் கூறுகிறான். அது சாத்தியமா? முதல் நாள்தான் இங்கிருந்து விடை பெற்றுப் போனான். அதற்குள் அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்றிருக்க முடியுமா? முடியக்கூடிய காரியமா? நம்ப முடியவில்லை. பிரதம சமையல்காரன் நளசர்மா, ஜமுக்காளத்தில் வான வீதியிலே பறந்து போனதாக உதவி சமையல்காரன் சொல்லுகிறான். இது அதைவிட அதிசயமாக இருக்கிறது! இப்படி எண்ணமிட்டபடியே நிலா முற்றத்தில் நின்று கொண்டிருந்தார் மாணிக்கவர்மர். ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அவர் மட்டுமா பேசவில்லை? அவர் கூட இருந்த கீர்த்தியும் தான் பேசவில்லை. குந்தளவல்லியும் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். மௌனத்தில் மூழ்கி இருந்த மூவரின் உள்ளங்களிலும் வெவ்வேறுவிதமான எண்ணங்கள் அ லை மோ தி க் கொண்டிருந்தன. வெள்ளியை உருக்கி ஓடவிட்டது போல நிலா வீசிக் கொண்டிருந்தது. இளந் தென்றல் இதமாக வீசிக் கொண்



டிருந்தது. அவர்கள் உப்பரிகையின் மீது நின்று கொண்டிருந்ததால் மங்களகிரி நகரத்தின் இரவுக் காட்சி அற்புதமாக இருந்தது. நகரைத் தழுவினாற் போல் ஓடிய நதியில் சில உல்லாசப் படகுகள் நிலவு காயும் இரவின் இன்பத்தை விளக்குவதுபோல் மிதந்து கொண்டிருந்தன.

கடைசியில் கீர்த்திதான் வாய் திறந்தான். ''இது ஒரு விநோதமான அனுபவம் !'' என்றான்.


''விநோதம் மட்டுமல்ல. விசித்திரம்' விபரீதம் என்றும்கூடச் சொல்லலாம்'' என்றார் மங்களகிரி அதிபர்.

''ஆனால் இதில் ஆச்சரியமோ அதிசயமோ ஏதுமில்லை.''

'' என்னால் நம்பவே முடியவில்லை, இளவரசே! நளசர்மாவுக்கு நான் எத்தனை அன்பும் ஆதரவும் அளித்து வந்தேன். அவனா இப்படி...?''

''அவன் மீது குற்றமே இல்லை. எதிர்பாராது நிகழ்ந்த செயல் இது. அவன் மட்டுமல்ல. அந்த என் கம்பளத்தின் மீது யார் உட்கார்ந்தாலும் அவர்களுக்கும் அதே கதிதான் ஏற்பட்டிருக்கும். அதன் விசேஷம் பற்றி நளசர்மாவுக்குத் தெரிந்திருக்காது. தெரிந்ததினால்தான் அவன் அந்த மூட்டையோடு அப்படிப் பறந்து போனான் என்பதை நான் நம்பவில்லை'' என்ற கீர்த்திவர்மன், அந்தக் கம்பளத்தின் மந்திர சக்தியைப் பற்றிச் சுருக்கமாக அவரிடம் விளக்கினான். விரிந்த கண்களோடு குந்தளவல்லியும் கேட்டுக் கொண்டிருந்தாள். ''அதில் உட்கார்ந்திருப்பவர், தான் எங்கு போகவேண்டும் என்று கூறினாலும் அவர்களை அது அங்கு கொண்டு போய்விடும். அது தெரியாமல், களைத்துப் போய் அதில் உட்கார்ந்த நளசர்மா 'நான் விசித்திரபுரியில் இருந்தால் எப்படி இருக்கும்' என்று கூறி இருக்கிறான். மந்திரக்கம்பளம் உடனே அவனைத் தூக்கிக் கொண்டு பறந்துவிட்டது!

''அக்கினி அரக்கனை அழித்துவிட்டு அரசருடன் — அதாவது என் அப்பாவுடன் — சமரசம் செய்து கொள்ளலாம் என்றுதான் எண்ணி இருந்தேன். அதன் கொம்புகளையும் வாலையும் நேரே மன்னரின் முன்னிலையில் கொண்டு போய்ச் சமர்ப்பித்திருப்பேன். ஆனால் குந்தளவல்லி அவைகளைக் காண ஆசைப்பட்டாள். அதற்காகவே இங்கு கொண்டுவந்தேன். இல்லாவிட்டால்




'' வீட்டில் அவ்வளவு பேப்பர் இருக்கு சுவரெல்லாம் கிறுக்குறியே?''

''சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும் என்று நீங்க தானே சொல்லிக் கொடுத்தீங்க!''

ஜீவகாருண்யம்

சிரிக்கச் சிரிக்க




அது இந்நேரம் மன்னரின் முன்னிலையில் தான் இருக்கும்'' என்றான் கீர்த்தி.

தனக்காக தன்னிடம் காண்பிப்பதற்காக அதை இங்கு கொண்டு வந்ததாகக் கீர்த்தி கூறியதும் குந்தளவல்லியின் ரோஜா முகம் நாணத்தினால் சிவந்தது. ''என் பொருட்டுத் தாங்கள் அதை இழந்துவிட்டீர்களே!'' என்றாள்.

தன் சகோதரி மகளின் அழகில் இளவரசன் மயங்கிப் போயிருக்கிறான் என்பதில் மாணிக்கவர்மருக்குப் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் மன்னருடன் இளவரசனுக்குச் சரியான ஒட்டுதல் உறவு இல்லையே என்பதில் கொஞ்சம் வேதனையாகவும் இருந்தது. 'மகாராஜாவைப் பகைத்துக் கொண்டுள்ள மகனுடன் எப்படி உறவு வைத்துக் கொள்ள முடியும்? இங்கு இவன் அதிக நாள் தங்க முடியாது. மந்திரக் கம்பளத்தின் உதவி இல்லாமல் இவன் இங்கிருந்து வெளியேற முடியாது. வெளியே போனால் உடனே இவனைக் கைது செய்து கொண்டு போக மகாராஜாவின் வீரர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமா? இதற்குள் நளசர்மா விசித்திரபுரி அரண்மனையில் மந்தஹாச மகாராஜாவின் முன்னே அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் சமர்ப்பித்து அதைத் தானே கொன்றதாகக் கூறிக்கொண்டிருப்பான். இளவரசனின் மாமன் மகளான மஞ்சுளாவின் கணவனாகும் பாக்கியத்தையும் விசித்திரபுரியின் இளவரசுப் பட்டத்துக்கு உரியவனாகவும் ஆகிவிட போகிறான் நளசர்மா. என்னிடம் சமையற்காரனாக இருந்தவன் இந்த நாட்டின் இளவரசன். எத்தனை கேவலம்!' இப்படி எண்ணக் கடலிலே தன்னை மறந்து மூழ்கி முக்குளித்துக் கொண்டிருந்தார் மாணிக்க வர்மர்.

கீர்த்தியோ குந்தளவல்லியுடன் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தான். அந்த நிலவும், தென்றலும் அவள் அழகும் அவனிடம் புதிய உற்சாகத்தை உண்டாக்கி இருந்தன. அக்கினி அரக்கனின் தலையும் வாலும் பறி போனதைப் பற்றி அவன் கொஞ்சமும் வாட்டமடைந்ததாகத் தெரியவே இல்லை. அறிவாளியல்லவா? குந்தளவல்லியுடன் அப்படி என்ன பேசிக் கொண்டிருந்தான் கீர்த்தி? எதைப்பற்றி? அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் தான் கொண்டு வந்த கதையைத் தான் விவரித்துக் கொண்டிருந்தான் அவளிடம். அக்கினி அரக்கனைத் தான்




''கை படாமல் தயாரித்த ரொட்டி என்பதை இப்படியா ருசுப்படுத்தறது ?''

''வீட்டுக் கணக்கு என்ன ஆச்சுன்னு கேட்டால், இப்படியா...?''



சாமா



''என் வகுப்பில் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பையன் வந்து படிக்கிறாண்டா!''

''பக்கத்துத் தெருவிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு வருவதற்கே நமக்கு வேர்க்கிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து 'டயத்'துக்கு எப்படித்தான் வரானோ?''

சந்திக்கச் சென்றதையும் அத்துடன்—அதன் ஜன்ம விரோதியான பனி அரக்கனை மோதவிட்டு அவை இரண்டும் போரிட்டு மடிவதற்குத் திட்ட மிட்ட தன் திறமையையும் பற்றிக் கூறிக் கொண்டிருந்தான்.


நேர்மையும் நாணயமும் உள்ள அறிவாளியானதால் கீர்த்தி எதையும் ஒளிக்கவில்லை. உண்மையை உள்ளபடி கூறினான். ''அக்கினி அரக்கனை நான், கொல்லவே இல்லை. உண்மையில்அதை அழித்தது பனி அரக்கன் தான். மஞ்சுளாவை மணப்பதற்கு உரிமையுடையது அதுதான். ஆனால் பாவம் அதற்கு அதிர்ஷ்டமில்லை. மஞ்சுளாவின் கணவனாகும் வாய்ப்பை இழந்து விட்டது. அந்தப் பயங்கரப் போரில் அதுவும்; இறந்து விட்டதே என்ன செய்ய?'' என்றான் கீர்த்தி. குந்தளவல்லியினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

இவர்கள் இப்படி உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. வான வீதியிலே 'விஷ்' என்று ஒரு சப்தம் கேட்டது. நீல வானத்திலே நிலவொளியிலே; ஏதோ ஒன்று தங்கள் தலைக்கு மீதாகப் பறந்து போனதைக் கண்டாள் குந்தளவல்லி. அதுமட்டுமல்ல, அந்தப் பறக்கும் சாதனம் அரண்மனையின் பெரிய சாளரத்தின் வழியாக உள்ளே புகுவதையும் கண்டாள் குந்தளவல்லி. அவளுக்கு வியப்பும் பயமும் ஏற்பட்டன. அதே காட்சியைக் கீர்த்தியும் கண்டான். ஆனால் அவனுக்கு வியப்போ திகைப்போ ஏற்படவில்லை. ஏனென்றால் அந்தப் பறக்கும் சாதனம் தன்னுடைய மந்திரக் கம்பளம் தான் என்பதை அவன் ஒரு நொடியில் அறிந்து கொண்டான். அது மட்டுமல்ல. அந்தக் கம்பளத்தில் தன் தந்தையும் தாயும் இன்னொரு நபரும் அமர்ந்திருப்பதையும் கண்டான் கீர்த்தி. அந்த இன்னொரு நபர் மங்களகிரி அரண்மனையின் பிரதம சமையற்காரன் நளசர்மாவாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் அதிபுத்திசாலியான அரசகுமாரனுக்கு விளங்கிவிட்டது. என்ன நடந்திருக்கும் என்பதை யூகிக்கலானான் கீர்த்தி. இது என்ன அதிசயம் என்று விழிகளால் வினவினாள் குந்தளவல்லி. 'வியப்படையாதே, விளக்குகிறேன்!' என்று பார்வையாலேயே பதில் கூறினான் இளவரசன். அதே வேளையில் ஒரு சேவகன் வந்து. ''விசித்திரபுரி மகாராஜா மந்தஹாஸர் வருகை புரிந்திருக்கிறார் நம் அரண்மனைக்கு. உங்களை உடனே காணவிரும்புகிறார்'' என்று கூறினான் மாணிக்கவர்மரிடம்.

''மந்தஹாஸரா, வந்திருக்கிறாரா?'' என்று கலவரப்பட்டுப் போனார் அவர். இளவரசனைத் தான் இருத்திக் கொண்டிருப்பது தெரிந்துதான் இப்படித் திடீர் விஜயம் செய்திருக்கிறாரோ என்று பதறியது அவர் நெஞ்சம். 'அந்தப் பயல் நளசர்மாவின் வேலையாகத்தான் இருக்கும்' என்று சஞ்சலப்பட்டது.

''கலக்கமடையாதீர்கள். உங்கள்; கையும் காலும் ஏன் இப்படித் தாளம் போடுகின்றன? தைரியமாகப் போய் மகாராஜாவுக்கு வரவேற்பு கொடுங்கள். நானும் பின்னாலேயே வருகிறேன்'' என்று அவருக்குத் தெம்பூட்டி அனுப்பினான் கீர்த்தி.

''ஆமாம் ... நீங்களும் என் பின்னாலேயே வாருங்கள். அதுதான் நல்லது'' என்று கூறியபடியே முன்னால் போனார் மாணிக்கவர்மர். கீர்த்தி மனோகரமான புன்னகையுடன் குந்தளவல்லியின் கரம் பற்றியபடி சாவகாசமாக நடந்தான். எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து வெற்றி கொள்ளும் வல்லமை பெற்றவனை கீர்த்திவர்மன். (தொடரும்)



- உயிரினங்களில் அதிக நேரம் மூச்சை அடக்கிக் கொண்டிருப்பது முதலைதான். முதலை சுமார் ஆறு மணி நேரம் முச்சுத் திணறாமல் தண்ணீருக்குள் இருக்கும்.

- பிராணிகளில் தண்ணீரே குடிக்காத பிராணி ஆஸ்திரேலியாவில் உள்ள கோலா என்னும் சிறு கரடிதான்! இது யூகாலிப்டஸ் மரத்தின் பட்டையைத் தவிர வேறு எதையும் தின்பதில்லை!





1371. நவரத்தினங்களுள் ஒன்று கடலுக்கு அடியில் கிடைக்கிறது. அது எது?

1372. கடற் பன்றி வகைக் கடல் வாழ் பிராணிக்குப் போர்ப்பாய்ஸ் (Porpoise) என்று பெயர். இவைகளின் கூட்டத்துக்கு என்ன பெயர் தெரியுமா?

1373. சுறா, டால்ஃபின், டன்னி, ஹெர்ரிங் — இவை கடல் வாழ் பிராணிகள். இவைகளில் ஒன்று பாலூட்டும் இனம். அது எது?

1374. நியூ ஃபௌண்டுலாந்தைக் கண்டுபிடித்தது — கொலம்பஸ், காபோட், டிரேக் இவர்களில் யார்?

1375. புகழ் பெற்ற விக்டோரியா நீர் வீழ்ச்சியை முதன் முதலில் கண்ட வெள்ளையர் யார்?

1376. ஆஸ்திரேலியாவின் தென் பகுதியில் உள்ள ஒரு தீவுக்கு அதைக் கண்டவரின் பெயரையே சூட்டியுள்ளனர். அந்தத் தீவின் பெயர் என்ன?

1377. அமெரிக்க மாகாணங்களிலேயே மிகப் பெரிய மாகாணம் எது?

1378. பாரதத்தின் மாகாணங்களுள் மிகப் பெரிய மாகாணம் எது தெரியுமா?

1379. எரி, சுபீரியர், ஒன்டேரியோ ஸால்ட் லேக் — இவைகள் உலகிலுள்ள ஏரிகளில் சில. இதில் அமெரிக்காவில் இல்லாத ஓர் ஏரி எது?

1380. குதிரை, கழுதை இவைகளின் கலப்பினால் பிறக்கும் ஒரு மிருகத்துக்கு என்ன பெயர்?

1381. மலேசியாவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் என்ன தெரியுமா?

1382. அற்புத உலகத்தில் அலிஸ் என்ற குழந்தைகளுக்கான கதையை எழுதியவர் யார் தெரியுமா?

1383. வெள்ளைக் கோபுரம் (White Tower) என்ற புகழ் பெற்ற கட்டடம் இருப்பது பாரிஸ், எடின்பரோ, விண்ட்ஸர், லண்டன் — இவைகளில் எது சரி?

1384. ஸஹாரா பாலைவனம் எங்குள்ளது?

1385. மரீஷியஸ் தீவு இருப்பது பசிபிக்கடலில், செங்கடலில், மத்தியதரைக் கடலில், இந்துமாக் கடலில் — இதில் எது சரி?

1386. முதல் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

1387. அலாஸ்கா கீழ்க் கண்டுள்ள நாடுகளுள் எதற்குச் சொந்தமானது? கானடா, கிரீன்லாந்து, அமெரிக்கா, ரஷ்யா, சீனா.

1388. லைபீரியா, சைபீரியா, நைஜீரியா, சூடான், நயாஸாலாந்து — இவைகளில் ஆப்பிரிக்காவில் இல்லாதது எது?

1389. இந்த இதழ் கோகுலம் அட்டையில் இருக்கும் நாகலிங்கப் பூவுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

1390. இந்தியாவில் ஹிந்தி பேசும் மக்கள் தொகை எவ்வளவு, தமிழ் பேசுவோர் எவ்வளவு?

1391. அலெக்ஸாந்தர் பாரதத்தின்மீது படையெடுத்து வந்தது எந்த ஆண்டில்?

1392. சீனப் பேரரசு புத்த மத நூல்களுக்காக இந்தியாவுக்குச் சீன யாத்திரிகர்களை அனுப்பியது எப்போது?

1393. குப்தர்கள் காலத்தில் இந்தியாவில் யாத்திரை செய்த சீனரின் பெயர் என்ன? எந்த ஆண்டுகளில்?

1394. அமேஸான் நதி எந்தக் கடலில் சங்கமமாகிறது தெரியுமா?

1395. கீழ்க்கண்ட நதிகளில் எதில் விக்டோரியா நீர்வீழ்ச்சி ஏற்படுகிறது? நிகர், காங்கோ, நைல், ஸாம்பஸி.

1396. மெல்போர்ன் நகரம் எந்த நதிக்கரை மீது அமைந்துள்ளது?



1371. நல் முத்து. 1372. ஸ்கூல் (School) என்று பெயர். 1373. டால்ஃபின். 1374. காபோட் (Cabot) 1375. டேவிட் லிவிங்ஸ்டன். 1376. டாஸ்மேனியா-கண்டவரின் பெயர் டாஸ்மான். 1377. டெக்ஸாஸ். 1378. மத்தியப் பிரதேசம். 1379. ஸால்ட் லேக். 1380. மியூல் (Mule) என்று பெயர். 1381. ரப்பர். 1382. லூயி கரோல் என்பவர். 1383. லண்டனில். 1384. ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதியில். 1385. இந்துமாக் கடலில். 1386. ஜேம்ஸ் வாட் என்பவர். 1387. அமெரிக்காவிற்கு. 1388. சைபீரியா. 1389. Cannanbal Elower இதன் காய் குண்டுகளைப் போல் இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம். 1390. ஹிந்தி. 133,435,360. தமிழ்: 30,562,706. (1966ல் வருடத்திய கணக்குப்படி) 1391. கி. மு: 327ல். 1392. கி.பி. 64ல். 1393. பாஹியான் கி. பி. 405 லிருந்து 411 வரை. 1394. அட்லாண்டிக் கடலில். 1395. ஸாம்பஸிநதியில். 1396. யாரா நதிக்கரையில்.

மக்கள் நம்பிக்கை
என்னும் இனிதான
சுமையை மகிழ்வுடன்
ஏற்று செயல்படுவதே
எங்கள் குறிக்கோள்.



60 ஆண்டு காலமாக
உழைத்து உழைத்து நாங்கள்
மக்களின் நம்பிக்கைக்குப்
பாத்திரமாகியிருக்கிறோம்.

எனவேதான் சிறிய
பார்சல்கள் முதல் பெரிய
பார்சல்கள் வரை நாங்கள்
பத்திரமாகக் கொண்டு
போய்ச் சேர்ப்போம் என்ற
நம்பிக்கை மக்களுக்கு
இருக்கிறது.

இந்த நம்பிக்கைக்கு
அடிப்படை இவைதான்:

- எங்கள் லாரிகள் அனைத்தும்
எங்களுக்குச் சொந்த
மானவையே. எனவே
காத்திருக்க வேண்டிய
அவசியமில்லை.
- அதிக அளவில் பார்சல்களை
ஏற்றிச் செல்ல நிறைய
டிரெய்லர்களும் எங்களிடம்
உண்டு. எனவே
காத்திருக்கத் தேவையில்லை.
- லாரிகளில் பழுதேற்பட்டால்
வழித் தடங்களில் அமைந்
துள்ள எங்கள் பட்டறைகள்
உடனடியாகச் சீர்
செய்கின்றன. எனவே
தாமதம் தவிர்க்கப்படுகிறது.
- ஓர் இடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடையான பார்சல்
சர்வீஸ் இருப்பதனால் நேரம்
மிச்சப்படுகிறது. பார்சல்கள்
இறக்கி ஏற்றப்படுவது
தவிர்க்கப்படுவதால்
சேதமும் விளைவதில்லை.
- தென்னகத்தின் பெரு
நகரங்களுக்கிடையே
மின்னல்வேக சர்வீஸ்களும்
நடத்துகிறோம். எனவே
உங்கள் பொன்னான நேரம்
மிச்சப்படுகிறது.

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த
நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS

உங்கள்
நம்பிக்கைக்குரியது
டிவிஎஸ்

PDS/SR 1954 TMB

கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



